விலை சதம் 5

இரண்டாம் பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நாமார்க்கும் குடியல்லேம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு புரட்டாசி 28உ செவ்வாய்க்கிழமை | Colombo, October, 14 1947 | ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 28 | இதழ் 33

ஐக்கிய தேச ஸ்தாபனம் அமெரிக்க ஏஜன்ஸி ஆகிறது

சோவியத் ரஷியா எச்சரிக்கை

கமியூனிஸ்ட் அகிலமும் ஐரோப்பாவின் சோஷியலிஸமும்

மாஸ்கோ, அக். 12

கமியூனிஸ்ட் பத்திரிகை 'பிரவடா' ஐக்கிய தேச ஸ்தாபனத்திலுள்ள தனது நிருபர் அனுப்பிய கீழ்க் கண்ட செய்தியைப் பிரசுரித்திருக்கிறது:-

உலகிலே தலைதூக்கி வந்த ராட்சஸக் கொள்கையான பாசிசத்துடன் போராடும் மக்களை உய்விப்பதற்காக சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டார் ஐக்கிய தேச ஸ்தாபனத்தை நிறுவினர். அவர்கள் எந்த நோக்கத்துடன் அதை நிறுவினார்களோ அந்த நோக்கம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவருகிறது. ஐக்கிய தேச ஸ்தாபனத்தைச் சேர்ந்த பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவின் வாலைப்பிடித்துக்கொண்டு திரிகின்றன. அமெரிக்காவின் அந்நிய நாட்டுக் கொள்கையையும் அமெரிக்க சர்க்காரின் கோரிக்கைகளையும் பின்பற்றும்படி அவைகள் பலவந்தப்படுத்தப்படுகின்றன. ஐக்கியதேச ஸ்தாபனத்தை அமெரிக்காவின் ஏஜன்ஸியாக மாற்றுவதற்கு முயற்சி நடைபெறுகிறது. இம்முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கிறோம். ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் உயர்நிலையான சர்வதேச ஒத்துழைப்புக்கொள்கை மீறப்படுவதை அவைகள் கவனிக்கவேண்டும். உலகிலுள்ள நாடுகள் இது விஷயத்தில் கூர்மையாக கவனம் செலுத்திவருகின்றன. இக்கொள்கையை மீறுகிறவர்களுக்குக் கூடிய சீக்கிரம் அவைகள் பாடம் படித்துக் கொடுக்கும்.

யூகோ மகிழ்ச்சி

பெல்கிரேட், அக். 12

யூகோஸ்லேவியா பாமர மக்கள் கட்சி நிர்வாகக் கமிட்டி, 9 நாடுகளின் கமியூனிஸ்ட் அகிலத்தைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றியது. உலக சமாதானத்தைஉண்டுபண்ண உலக ஐக்கிய முன்னணியாக இந்த ஸ்தாபனம் நிறுவப்பட்டுள்ளது என்று செர்பியா பிரதமர் பேசியதை ஞாயிற்றுக்கிழமை பத்திரிகைகள் பிரசுரித்து அதைப் பாராட்டியிருக்கின்றன.

பெல்ஜியத்துக்கு எச்சரிக்கை

மாஸ்கோ, அக். 12

சுரங்கங்களில் கட்டாய வேலை செய்யவேண்டுமென்பதை ஆட்சேபித்ததால் பெல்ஜியத்தில் அநேக ரஷியத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் இவர்களில் சிலர், ஜெர்மனியிலுள்ள ஆங்கிலோ-அமெரிக்க பிரதேசங்களிலிருந்துபெல்ஜியத்துக்கு வந்தவர்கள் என்றும் அவர்களைத் திரும்ப ஜெர்மனிக்கு அனுப்ப பெல்ஜிய அதிகாரிகள் முயன்றபோது புரட்சி செய்தனரென்றும் செய்தி கிடைத்திருக்கிறது. இது பெல்ஜியத்தின் மானக்கேடான நடவடிக்கையென்றும் அந்த ரஷிய தொழிலாளர்களை ரஷியாவுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் இங்குள்ள பத்திரிகைகள் பெல்ஜியத்தை எச்சரித்திருக்கின்றன.

லண்டன் பத்திரிகைக்கு எச்சரிக்கை

புடாபெஸ்ட், அக். 12

ஹங்கேரி விஷயங்களில் ஹங்கேரி கமியூனிஸ்ட் கட்சி தலையிடுவதை ஆட்சேபித்து லண்டன் டெயிலிஹெரால்டுபத்திரிகை தனது ஹங்கேரி நிருபர் அனுப்பிய செய்தியைப் பிரசுரித்திருந்தது. இங்குள்ள கமியூனிஸ்ட் பத்திரிகை 'ஸபாத' ஆசிரியர் இச்செய்தியைக் கண்டித்து ஹங்கேரி சோஷியலிஸ்டுகள் கூடிய சீக்கிரம் கமியூனிஸ்டுகளுடன் ஐக்கியமாவார்கள் என்றும் இதற்கும் இந்த லண்டன் பத்திரிகைக்கும் சம்பந்தமெதுவுமில்லையென்றும் எச்சரித்திருக்கிறார். ஐரோப்பிய சோஷியலிஸ்டுகள் மீது கமியூனிஸ்ட் அகிலம் போர் தொடுத்திருப்பதாக பிரிட்டிஷ் தொழிற் கட்சிக் காரியதரிசி விடுத்த அறிக்கைக்கும் பதில் கொடுத்திருக்கிறார்.

இங்கு பிளாக் மார்க்கெட்காரர்களையும் கட்டுப்பாடு விலையை உயர்த்துகிறவர்களையும் தண்டிக்க தொழிலாளர் கோர்ட் நிறுவப்பட்டது.

பிரிட்டிஷ் கமியூனிஸ்டுகள் வரவேற்பு

லண்டன், அக் 12

கமியூனிஸ்டு அகிலத்தை பிரிட்டிஷ் கமியூனிஸ்டுகள் வரவேற்று தீர்மானம் நிறைவேற்றினர்.

பிரான்ஸில்

பாரிஸ, அக். 12

சோஷியலிஸட் தலைவரான பிளம், பிரான்ஸில் நடைபெறும் முனிசிபல் தேர்தல்களில சோஷியலிஸட் கட்சி வெற்றி பெறுமென்று தெரிவித்தார். கமியூனிஸட் அகிலம் சோஷியலிஸட் தலைவர்களைத் தாக்கியிருப்பதைக் குறித்து அவர் சோஷியலிஸத்தில் வலதுசாரி இடதுசாரி என்ற பேதமிருப்பதாகக் கூறுவது தவறு என்று கூறினார்.

பிரான்ஸின் யுத்த காலத் தலைவரான டி கால் இப்பொழுது அரசியல் அரங்கத்தில் பிரவேசித்திருக்கிறார். இன்று அவர் அல்ஜீயர்ஸில் பேசிய போது, உலக சமாதானத்திற்கும் பிரான்ஸின் பாதுகாப்புக்கும் ரஷியா தொல்லையாக இருக்கிறதென்றும் தெரிவித்தார்.

பாரிஸில் சுரங்க ரயில் பாதைகளில் வேலைசெய்யும் 200 மெட்ரோ தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்வதால் ரயில்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. நாளை பொது வேலைநிறுத்தம் நடைபெறுமென்று அஞ்சப்படுகிறது. ஜனப் போக்குவரத்துக்கு பெரிதும் இடைஞ்சல் ஏற்பட்டிருக்கிறது.

இத்தாலியில்

ரோம், அக். 12

கமியூனிஸட் அகிலம் ஏற்பட்டபின் ஐரோப்பாவிலும்பிரான்ஸிலும்இத்தாலியிலும்முதன் முதலாக முனிஸிப்பல் தேர்தல்கள் நடைபெறுகின்றன

(4-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் ஆட்சேபனை மனுக்கள்

மற்றும் மூன்று தாக்கல்!

கொழும்பு, அக். 13

இன்று மற்றும் மூன்று தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. ஆக மொத்தம் இதுவரை 18 ஆட்சேபனை மனுக்கள் தாக்கலாயிருக்கின்றன.

இன்று பாராளுமன்ற மாவனல்ல பிரதிநிதி திரு எச். எல். ரதவத்தையின் தேர்தலை ஆட்சேபித்து திரு சி. ஆர். தலிகம்பன தேர்தல் ஆட்சேபனை மனு தாக்கல் செய்தார். வாக்காளர் சுதந்திரமாக வாக்களிக்க இடைஞ்சல் செய்ததாகவும் மனுதார் யோக்கியதைபற்றி பொய்யான விஷயங்களடங்கிய அறிக்கைகள் பிரசுரம் செய்ததாகவும் காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

பாராளுமன்ற மத்துரட்டபிரதிநிதி திரு. எம். டிங்கிரிபண்டா தேர்தலை ஆட்சேபித்து திரு. டி. டபளியூ. எம். சேனிவிரத்ன ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறார் வாடகை மோட்டார் உபயோகித்ததாகவும், அத்து மீறி செல்வாக்கை உபயோகித்ததாகவும், அச்சாபீஸ, வெளியிட்டோர் பெயர்களின்றி துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்ததாக வும் காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

கெலனியாத் தொகுதியில் திருஜே ஆர். ஜயவர்தன பாராளுமன்ற அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பதை ஆட்சேபித்து திரு கே ஏ. பெரேரா என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அச்சாபீஸ், வெளியிட்டோர் பெயரின்றி துண்டுப் பிரசுரம் விநியோகித்ததாகவும் மற்ற அபேட்சகர் குணத்தைப்பற்றி பொய்யான விஷயங்கள் வெளியிட்டதாகவும், அத்து மீறி செல்வாக்கு உபயோகித்ததாகவும் காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

சன்னதி முன்பாக தற்கொலை

மாரியம்மன் கோவிலில் கோர சம்பவம்

திரிகோணமலை, அக். 13

இன்று திரிகோணமலை மாரியம்மன் கோவில் வாசற்படியில் மடத்தடியைச் சேர்ந்த ஈ. இராசரத்தினம் என்பவன் தம்மைச் சுருக்கிட்டுத் தொங்கி இறந்து காணப்பட்டான்.

சடுதி மரண விசாரணைக்காராகிய திரு. என். குமாரசுவாமி மரண விசாரணை முடிவில், காலஞ்சென்ற இராசரத்தினம் தற்கொலை புரிந்து இறந்தான் என்று தீர்ப்பளித்தார்.

(ந-நி-தந்தி)

'செனட்' சபைத் தேர்தலும் நியமனமும்

பாராளுமன்றக் கட்சிகள் தெரிவுசெய்ய உத்தேசித்திருக்கும் அபேட்சகர்கள்

பொதுத் தேர்தலில் தோல்வியுற்றோரை கவர்னர் நியமனம் செய்யமாட்டார்

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக் 14

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பாராளுமன்றப் பிரதிநிதிகள் காங்கிரஸ் காரியதரிசி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்களை "செனட்" சபைக்குத் தெரிவு செய்யத் தீர்மானித்துள்ளனரென அறியப்படுகிறது.

தமிழ்க் காங்கிரஸ முன் எண்ணியபடி தாழ்த்தப்பட்டவர்களுள் ஒருவரை நியமிக்க முடியாததற்குக் காரணம், அவர்கள் தெரிவு செய்யவென்று எண்ணியிருந்த தாழ்த்தப்பட்டவர்கள் இருவரும் முப்பத்தைந்து வயதுக்கு உடபட்டவர்களாகவே இருப்பதனாற்தான் என்று காங்கிரஸில் உயர் பதவி வகிக்கும் ஒருவர் எமக்குத் தெரிவித்தார்.

நியாய துரந்தரர் திரு. எஸ். நடேசன், சுயேச்சை அங்கத்தவர்கள், லங்கா சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் சிலரின் ஆதரவைப் பெற்று செனட் சபைக்குத் தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிகின்றது.

போல்ஷிவிக் லெனினிஸட் கட்சியார், பாணந்துறையிலுள்ள ஸ்ரீ சுமங்கல கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு டி. டபிள்யூ. ஜே பெரேரா என்பவரை செனட்டுக்குத் தெரிவு செய்யத் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை இந்தியன் காங்கிரஸ கட்சி, திரு. பெரி சுந்தரம் அவர்களை செனட்டுக்குத் தெரிவு செய்வார்கள்.

யூ. என். பிக் கட்சியினர் இன்று காலையில் தான் செனட் சபைக்குத் தாங்கள் எவர்களைத் தெரிவு செய்வது என்பதையிட்டு ஆலோசிப்பார்கள். திரு டி. எஸ். சேனநாயக்கா பாராளுமன்றத் தேர்தலில் தோற்றவர்கள் ஒருவரையும் தெரிவு செய்வதில்லை யெனத் தீர்மானித்துள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

யூ. என். பிக் கட்சியினர் மீன்பிடி இலாகா மந்திரியின் மனைவி ஸ்ரீமதி ஜோர்ஜ். ஈ. டி சில்வா அவர்களையும், பழைய அரசாங்க சபை அங்கத்தவராகிய ஸ்ரீமதி. ஏ. எப். மொலமுரேயையும் நிச்சயமாகத் தெரிவு செய்வார்கள் எனக் கூறப்படுகிறது.

கவர்னர், ஸர் மாக்கான் மரைக்கார், ஸர். வில்பிரட். டி. சொய்சா, ஸர். ஜெரூட் விஜயக்கூன், ஸர். டிக்கிரி பண்டா பண்டிதர், ஸர். ஏர்னஸ்ட் டீ. சில்வா, டாக்டர். வீ. ஆர். ஷொக்மன், குமாரி சொனிகுரே முதலியவர்களை செனட் சபைக்கு நியமிக்கக் கூடும் என்று பேசப்படுகிறது

கவர்னரும் தேர்தலில் தோல்வியுற்றவர்களை செனட்டுக்கு நியமிக்கமாட்டாரென்றே நம்பப்படுகிறது.

தமிழ்க்கவிஞர் ஞாபகார்த்த விழா

எட்டையாபுரத்தில் கொண்டாட்டம்

ராஜாஜி விஜயம்

எட்டையாபுரம், அக். 13

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி இயகத்தின் தன்னிகரில்லாத தலைவரும் தமிழ்மக்கள் உள்ளத்தலே உணர்ச்சி மிகுந்த கவிதைகளால் சுதந்திரக்கனலை மூட்டியவரும் உலக மகா கவிகளுள் ஒருவராகப் போற்றப் பெறுபவருமான காலஞ்சென்ற திரு. சுபிரமணிய பாரதியார் 64 வருடங்களுக்கு முன்னர் ஜனனமான எட்டையாபுரத்தில் இன்று அவரது ஞாபகார்த்தக் கட்டிடத்திறப்புவிழா அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ் நாடெங்குமிருந்து ஏராளமான தமிழ் மக்கள் விஜயம செய்திருகிறார்கள்.

திருவாங்கூர், இலங்கை, பர்மா ஆகிய இடங்களிலிருந்தும் ஏராளமான தமிழ் மக்கள் வந்திருக்கிறார்கள். மலேயாவிலும் தென் ஆப்பிரிக்காவிலுமிருந்து அங்கு வதியும் ஏராளமான தமிழ் மக்களிடமிருந்து பாராட்டுத் தந்திகள் வந்திருக்கின்றன. மேற்கு வங்க கவர்னர் திரு ராஜகோபாலாச்சாரியர், சென்னை பிரதமர் திரு. ராமசாமி ரெட்டியார், சென்னை மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள், பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள் முதலியோர் வந்திருக்கிறார்கள். பாரதியார் குடியிருந்த வீடு வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டு எழுத்தாளர்சங்கத் தலைவர் திரு பெரியசாமி பாரதியார் வீட்டில் இந்திய தேசிய மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார். கவிஞரின் மாமனார் திரு. சாம்பசிவம் பாரதியாரின் பாடல்களைப் பாடி பாரதியாரின் வாழ்க்கையில் நிகழ்ந்த ருசிகர சம்பவங்களை எடுத்துக் கூறினார்.

ஞாபகார்த்தக் கட்டிடத்திற்கு முன்பாக ரு. கணேசன் இந்திய யூனியன் கொடியை ஏற்றுவித்தார்.

நேற்று மாலையிலிருந்து விழா வைபவங்கள் ஆரம்பமாயின. பகல் 3 மணியிலிருந்து பாரதியார் பாடல்கள் எங்கும ஒலித்தன. 30,000 பேர்கள் அடங்கும் பிரமாண்டமான பந்தலில் எள்ளுபோட இடமின்றி ஜனகூட்டம் நிறைந்திருந்தது. பிச்சையாபிள்ளை நாதசுரக்கச்சேரியோடு ஆரம்பமான சங்கீதக் கச்சேரிகள் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின சங்கீதக் கச்சேரியுடன் முடிவுற்றது இரவில் தண்டபாணி தேசிகர் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. எட்டையாபுரம் இந்தர லோகக் காட்சியாக வளவகியது.

இந்தியாவின் கவியரசி ஸ்ரீமதி சரோஜினிதேவி பாராடுச் செய்தி அனுப்பியிருந்தார்,

பாரதியாரின் ஞாபகார்த்தக் கட்டிடம் 50,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டுளளது.

திரு. மொகமது இஸ்மாயில், பிரதிநிதிகள் சபையின் சார்ஜண்ட் - ஆள் - ஆர்ம்ஸ் ஆக நியமிக்கப்படக் கூடுமென்று தெரியவருகிறது.

பிரிட்டிஷ் டோரி பத்திரிகைகளின் மடமை

லார்டு லிஸ்டோவல் சூடு

ஜனப் ஜின்னா பிரசாரத்திற்கு எல்லைத் தலைவர் சவால்

கிழக்கு பஞ்சாப்பில் அமைதி; டில்லியில் அகதிகளின பெயர்கள் பதிவு

புதுடில்லி, அக். 12

இந்திய சர்க்கார் அகதிகளின் பெயர்களைப் பதிவு செய்ய ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள் அதன்படி டில்லி மாகாணத்திலுள்ள அகதிகள் அனைவரும 15 தினங்களுக்குள் கட்டாயமாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். எந்த இடத்திலிருந்தாவது கலவரங்களின் காரணமாக மார்ச்சு மாதம் முதல் தேதிக்குப் பிறகு தங்கள் இருப்பிடங்களிலிருந்து அகதிகளாக ஓடிவந்து டில்லி மாகாணத்தில் அடைக்கலம் புகுந்து தங்கியிருக்கும் ஒவ்வொரு அகதியும் தன் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

சஹ்ரவர்தி தூது

மாஜி வங்கப் பிரதமர் ஜனப் சஹ்ரவர்தி இன்று காலை லாகூருக்கு விமானத்தில் பயணமானார். அங்கிருந்து கராச்சி செல்வார். பாக்கிஸதானிலும் இந்தியாவிலுமுள்ள சிறுபான்மை வகுப்பினர்களின் உரிமைகளைப் பற்றி அவர் இங்கு தங்கி மகாத்மா காந்தியுடன் கலந்து ஆலோசனை செய்தார். இது விஷயம்பற்றி அவர் ஜனப் ஜின்னாவுடன் மேலும் சம்பாஷிக்க கராச்சிக்குப் போகிறார்.

கிழக்குப் பஞ்சாப்பில் அமைதி

லண்டன், அக். 12

கிழக்குப் பஞ்சாப்பில் 9 ஜில்லாக்களிலும் பூரண அமைதி நிலவுகிறது. யாதொருவிதமான கலவரமுமில்லை. முஸ்லிம் அகதிகள் இரு ரயில்களிலும், 7 லொறிகளிலும் கால்நடையாகவும் அமிர்தசரசு வழியாக மிகவும் பத்திரமாகக் கடந்து சென்றனர்

ஜனப் ஜின்னாவுக்கு எல்லைத் தலைவர் பதில்

பம்பாய், அக். 12

நேற்று ஜனப் ஜின்னா பாக்கிஸ்தான சிவில், ராணுவ அதிகாரிகள் கூட்டதில பேசிய விஷயங்களுக்குப் பதில் விடுதலை மாகாண சட்டசபை உதவித் தலைவர் கிரிதாரி லால பூரி கீழ்க் கண்ட அறிக்கை வெளியிடடிருக்கிறார்:-

வடமேற்கு எல்லை மாகாணததில் முஸ்லிம் லீக் மந்திரி சபையைக் கைப்பற்றியதும் மாகாணச் செய்திகள் வெளியே செல்லாது கடுமையான இருட்டடிப்பு செய்யப்பட்டது. அதன் காரணமாக மாகாணத்தில் என்னதான் நடைபெறுகிறதென்பது வெளியுலகுக்குத் தெரியாமலே போய்விட்டது. இது சம்பந்தமாக சட்டசபை காங்கிரஸ கடசிக் காரியதரிசி மேஹர்சந்த் கன்னா இந்தியா, பாக்கிஸதான் பிரதம மந்திரிகளுக்கு அனுப்பிய தந்திகளைக் கூட அனுபப மறுத்து விட்டனர் நிலைமை இவ்விதமிருக்க பாக்கிஸதான் சர்க்கார் தங்கள் நல்லெண்ணத்தை ருசுப்படுத்த சந்தர்ப்பம் அளிக்கப்படாது போய்விட்டதென்று ஜனப் ஜின்னா கூறியது விந்தையாக இருக்கிறது.

பாக்கிஸ்தான் சர்க்கார் மீது சிறுபான்மையோருக்கு கொஞ்சமும் நம்பிக்கை ஏற்படாதவாறு அது நடந்து கொண்டது சம்பந்தமாக சில உதாரணங்களை திரு பூரி தனது அறிக்கையில் எடுத்துக் காட்டியிருக்கிறார். அதே சமயத்தில் சிறுபான்மையோர் பாக்கிஸ்தான் சர்க்கார் மீது விசுவாசமாக நடவாதிருந்தனர் என்பதற்கு ஒரு உதாரணம் காட்டும்படி அவர் ஜனப் ஜின்னாவுக்கு சவால் விடுத்திருக்கிறார்.

பிரிட்டிஷ் அதிகாரிகள் மீது கஸ்னவி குற்றச்சாட்டு

லாகூர், அக். 12

பாக்கிஸ்தான் உணவு மந்திரி இன்று பின்வருமாறு தெரிவித்தார்:- பாக்கிஸதானிலும் இந்தியாவிலும் பிரிட்டிஷார் பிரதம தளபதிகளாக இருந்தபடியால் யுத்தம் நேரிடாது போயிற்று. ராவல்பிண்டி ஜில்லவில் எனது சமரச முயற்சியால் 15,000 ஹிந்துக்கள் வெளியேறாது தங்கினர். ஹிந்துக்கள் வெளியேறும்படி சில பிரிட்டிஷ் அதிகாரிகள் தூண்டி வருகின்றனர்.

பத்திரிகைப் புளுகுகளுக்கு லார்டு லிஸ்டோவல கண்டனம

ஆக்ஸ்போர்ட், அக். 13

பிரிட்டிஷ் சர்க்கார் பர்மா மந்திரி லார்டு லிஸடோவல் பின்வருமாறு பேசினார்:- இந்தியாவில் நடைபெறும சம்பவங்களைக்குறித்து இங்கு பொய்யும புளுகும கலந்த செய்திகள் பிரசுரிக்கப்படுவது கண்டிக்கக் கூடியதாகும். இந்தியாவுடனும பாக்கிஸ்தானுடனும பிரிடடனுக்குள்ள உறவுகளுப் பங்கம் ஏற்படும வகையில செய்திகள் கேவலமான முறையில் பிரசுரிக்கப்படுகின்றன பிரிடடன் வெளியேறியதன் பயனாக கலகம் இம்மடோடாவது இருக்கிறது. சுதந்திரம வழங்காது பிரிடடன் மேலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்திருக்குமேயாகில், அங்கு பெரும் புரட்சி ஏற்பட டிருக்கும. பஞ்சாப் பிரிவினையால அங்குமடடுமே கலகம் விளைந்துகொண்டிருக்கிறதென்பதை மனதிலிருத்தி பிரிட்டிஷ் பத்திரிகைகள தங்கள மடததனததை வளம்பரம் செய்யாமல் புததிசாலித்தனமாக நடந்து கொளளுமென்று நம்புறேன். இரு டொமினியன்களிலும ஒரு சிறிய பகுதியான பஞ்சாபபைததவிர மற்ற பெரும் பகுதிகள் எங்கும் அமைதி நிலவுகிறது. இரு சர்க்கார்களும மிகத் திறமையாக நிலைமையை சமாளித்து வருவதை நான் நேரில கண்டறிந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஷூ புரட்டாசி மீ 28உ
செவ்வாய்க்கிழமை

பாராளுமன்றம்

பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் முதலாவது கூட்டம் இன்றுதான் நடைபெறவிருக்கின்றது. இக்கூட்டத்தில் பிரதிநிதிகள் சபையின் தலைவர் (ஸ்பீக்கர்), பதில் தலைவர், பதினைந்து சென்ட் சபை அங்கத்தவர்கள் ஆகியோர் தெரிவுசெய்யப்படுவர் எனவே இலங்கை மக்கள் அத்தனை பேரின் கவனத்தையும் இக்கூட்டம் இழுத்திருக்கின்றது என்பது மிகையாகாது.

புதிய சோல்பரித் திட்டப்படி இலங்கை அரசியலில் கட்சி முறை புகுத்தப்பட்டுள்ளது. ஆகவே பிரதிநிதிகள் சபையின் ஸ்பீக்கர் கட்சிப்பற்று அற்றவராக இருக்கவேண்டும். அதுவுமல்லாமல் மேலான நோக்கத்தையும் லட்சியத்தையும் கொண்டவராயிருத்தல் வேண்டும். உயர்ந்த நன்னடத்தையுள்ளவராயுமிருத்தல் வேண்டும்.

இப்பொழுது யூ. என். பி. கட்சியினரால் ஸ்பீக்கர் பதவிக்கு ஆதரிக்கப்படும் ஒருவர் சில அம்சங்களில் சற்று குறைந்தவராகவே பொது ஜனங்களால் எண்ணப்படுகின்றன. சபையில் சும்மா பதுமை போன்று இருப்பவர்தானே என்று பிரதிநிதிகள் எண்ணி வாக்கை அவருக்குக் கொடுப்பது அறிவுடமையாகாதென்றே சொல்லவேண்டியிருக்கிறது. யூ. என். பி. கட்சியை ஸ்தாபித்தவர்களில் இந்த அபேட்சகரும் ஒருவராவர். இப்படியானவர் ஸ்பீக்கர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சில சமயங்களில் யூ. என். பிக் கட்சியினருக்கும், மற்றும் வேறு கட்சியினருக்கும் இடையில் சபையில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறும்பொழுது, ஒருதலைப்பட்ட நியாயத்தை வழங்கவும்கூடும். அப்படியல்லாது அவர் நியாயத்தை வழங்கினாலும், எதிர்க்கட்சியினர் அவர் நியாயம் ஒருதலைப்பட்டதென எண்ணவும் இடம் ஏற்படும். இதற்கு இடங்கொடாது ஸ்பீக்கரைத் தெரிவுசெய்து கொள்ளவேண்டியது தேசப் பிரதிநிதிகளின் கடமையாகும்

இனி, பொதுத் தேர்தல்கள் நடக்கும்பொழுது அதில்வெற்றி பெறுவோர் அனைவரும் மிகவும் திறமை வாய்ந்தவர்களாகவோ அல்லது இராஜீய அனுபவம் உடையவர்களாகவோ இருப்பதில்லை. அழகாகப் பிரசங்கம் செய்வோரும், மற்றக் கட்சியினரை நன்றாகத் தூற்றுவோரும், பொதுஜன அபிப்பிராயத்தை லட்சியம் செய்யாதவரும் சில சமயங்களில் தேர்தல்களில் வெற்றியடைந்துவிடுகின்றனர். இதற்குச் சான்றாக இப்பொழுது தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் சிலர் காட்சியளிக்கின்றனர்.

மேலும் பல அறிவாளிகளும், நிபுணர்களும், அனுபவம் பெற்ற உத்தியோகஸ்தர்களும் வாக்காளர்களுடைய மனோநிலையை நன்கு அறிந்தோ அல்லது தேர்தல் தேவதைக்குச் சமர்ப்பிக்கவேண்டிய திரவியம் இல்லாமையாலோ பிரதிநிதிகள் சபைத் தேர்தலுக்கு அபேட்சகர்களாய் நிற்கவில்லை. பல நிபுணர்களும், பிரமுகர்களும் பாராளுமன்றத்திற்கு வெளியேதான் இருக்கின்றனர் என்றே கூறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய மேலான புத்திமதியை கோரவேண்டியது அவசியம்.

இதை உத்தேசித்துத்தான் சோல்பரித் திட்டத்தில் மேல் சபைக்குப் பதினைந்து பேரை பிரதிநிதிகள் தெரிவுசெய்யவும், பதினைந்துபேரை கவர்னர் நியமனஞ் செய்யும்படியும் நியதி இருக்கின்றது. நாட்டிலிருக்கும் உயர்ந்த அறிவுடைய ஆசிரியர்கள், அரசியல் ஞானம் உள்ளவர்கள், விவசாயம், சட்டம் முதலிய துறைகளிலுள்ள அனுபவ ஞானிகள், இராஜ தந்திரம் அறிந்த பிரமுகர்கள் முதலியவர்களை மேல் சபைக்குத் தெரிவு செய்வது பிரதிநிதிகள் கடமையாகும். இதை எவ்வளவு தூரத்தில் அனுபவசாத்தியமாகச் செய்யப்போகின்றார்கள் என்பதை பிரதிநிதிகள் இன்று காட்டவேண்டும்.

பத்திரிகைச் செய்திகள் மேற் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வதில் யூ. என். பிக் கட்சியினர் தம் கட்சிக்குச் சார்பானவர்களையும், மற்றவர்கள் தங்களுக்குச் சார்பானவர்களையும் தெரிவுசெய்வார்களென்பதாகவே அறிவிக்கின்றன. இதைப்போல் கேவலமான செயல் வேறொன்றுமில்லையென்பது திண்ணம்.

தலையாட்டிப் பதுமைகளால் நாட்டிற்கு ஒரு நன்மையும் ஏற்படாது.

கண்டி கொலை வழக்கு

சந்தேகப்பேர்வழிகைது

கண்டி, அக். 12

"கண்டி ரேஸ் கொட்டேஜில்" நடைபெற்ற படுகொலை சம்பந்தமாக றன்பண்டா என்னும் டேவிட் கைது செய்யப்பட்டிருக்கிறார். இவருக்கும் மேற்படிகொலைக்கும் தொடர்பு இருக்கிறது என சந்தேகிக்கப்படுவதே மேற்படி கைதுக்குக் காரணம்.

முன்னர் ஹாலி-எலையில் இவ்வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட அட்டப்பத்து விடுதலை செய்யப்பட்டு விட்டார். இது தப்பாக நடைபெற்றுவிட்டது என்று தெரிகிறது.

வாடிவீட்டுத் தொழிலாளிக்கு மரணதண்டனை

கத்தியால் குத்திக் கொலை புரிந்ததாக வழக்கு

கொழும்பு, அக். 13

கொழும்புத் துறைமுக வாடி வீட்டுத் தொழிலாளி எஸ். கந்தசாமியைக் கொலைசெய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் மேற்படி வாடி வீட்டின் இன்னோர் தொழிலாளியாகிய எம். வேலுவுக்கு ஜஸ்டிஸ் டயஸால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வழக்கின் பிரகாரம் டிசம்பர் 15ல் கந்தசாமிக்கும் வேலுவுக்கும் சச்சரவேற்பட்டு, வேலுவுடன் இருந்த புஹாரி என்பவர் கந்தசாமிக்கு அடித்ததாகச் சொல்லப்பட்டது. அதன்பேரில் கந்தசாமி திருப்பி அடிக்க வேலு ஓடிவிட்டானாம். சற்று கழிந்து ஓர் கத்தியுடன் வந்து கந்தசாமியின் மார்பில் அவன் பலமுறை குத்தியதாகவும், காயங்களுடன் கந்தசாமி அவனைப் பிடிப்பதற்குப் பின்னால் ஓடிச் சென்றதாகவும் ஆனால் முடியாது கீழே வீழ்ந்ததாகவும் தெரிகிறது.

5 நாட்களுக்குப் பின்னர் கந்தசாமி மாண்டான். வேலு டிசம்பர் 20-ம் தேதிவரை பிடிக்கப்படவில்லை.

எதிரி சார்பில் சார்ள்ஸ் ஜயவிக்கிரமாவும், சர்க்கார் தரப்பில் ஏ. ஸி. எம். அமீரும் ஆஜராஞர்கள்.

ரயில் கள்வனுக்குச் சிறைத் தண்டனை

குருணாக்கல், அக். 13

ரயில் பெட்டி ஒன்றில் இருந்து களவெடுக்க முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் அளவாவைச் சேர்ந்த சைமன் என்பவனுக்கு மூன்று மாத கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஏப்ரல் 20-ம் தேதி காலை 3 மணிக்கு போலிஸ் கான்ஸ்டபிள்களான பெரேரா, விஜயசிங்கா என்பவர்கள் மாகோவில் பதிவிருந்ததாகவும் அப்போது ஒரு ரயில் பெட்டியில் இருந்து குதித்தோடும் சைமனை அவர்கள் கண்டதாகவும் சொல்லப்பட்டது. கான்ஸ்டபிள்கள் பின்னால் ஓடி அவனைக் கைப்பற்றினர்கள். ஒரு ரயில் பெட்டியின் ஆமைப்பூட்டுடன் சேஷ்டை நடந்திருந்ததும் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

14-ம் தேதிக்குள் நிஜாமுக்கு கெடு

காந்திஜியின் சமாதான தீக் விஜயம்

மகாத்மாவின் ஒரு வருஷ அன்புப் பணி

புதுடில்லி, அக். 10

மகாத்மா காந்தி டில்லி வந்து நேற்றுடன் ஒரு மாதம் ஆகிவிட்டது. அவர் மேற்கு பாக்கிஸ்தானுக்குச் செல்ல இருந்தார்; ஆனால் இந்தியாவின் தலைநகரை வகுப்புவெறி ஆக்கிரமித்துக் கொண்டதால் காந்திஜி அங்கேயே தங்கிவிட்டார்.

மகாத்மா காந்தியின் சமாதான யாத்திரை சென்ற வருஷம் அவர் நவகாளிக்குப் புறப்பட்டதிலிருந்து ஆரம்பமானது ஞாபகமிருக்கலாம். நவகாளி திப்பேராஜில்லாக்களின்தொலை தூரக் கிராமங்களிலிருந்து பீஹார் முஸ்லிம்களுக்காவும் காந்திஜி பாடுபட்டார். ஆனால் பீஹாரின் அழைப்பு தவிர்க்க முடியாததாகவே அவர் பீஹாரின் தலைநகருக்குச் சென்றார். காந்திஜியின் ஆக்ஞைக்கு சீக்கிரமாக பீஹார் பணிந்தது; தேச அரசியலில் கொஞ்சம் ஈடுபடவும் அவருக்கு அவகாசம் கிடைத்தது. சிறையிலிருந்து ஸ்ரீ ஷேக் அப்துல்லாவின் மனைவி பேகம் அப்துல்லாவை காஷ்மீரில் போய் நேரில் காணவும் மகாத்மா மறந்துவிடவில்லை.

நவகாளி மைனாரிட்டிகளை மறக்க முடியாது போகவே மீண்டும் அவர் நவகாளி நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் கல்கத்தாவில் வகுப்புவாத தீ எரிவதைக் கண்டார். இந்த சமயத்தில் மாஜி வங்க பிரதமர் ஸ்ரீ சஹ்ரவர்தி காந்திஜியுடன் சேவையில் ஈடுபட்டார்.

ஒரு வருஷமாக மிருகங்கள் போன்று போராடிய கல்கத்தா வாசிகள் சுதந்திர தினத்தை நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் கொண்டாடிய அற்புதம் நிகழ்ந்தது. ஆனால் இவ்வற்புதம் காந்திஜியை கவரவில்லை; மீண்டும் கலவரம் ஆரம்பமாகவே காந்திஜி கல்கத்தாவில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார்.

அப்போது படுகொலை நடைபெறும் பஞ்சாப்பிலிருந்து காந்திஜி காதில் அபயக் குரல் ஒலித்தது. மகாத்மா தங்களை மறந்துவிட்டதாக பஞ்சாப் மக்கள் நினைத்தனர். ஆனால் அது உண்மையல்ல.

பஞ்சாப் செல்வதற்காக செப் 9-ம் தேதி டில்லி போய்ச் சேர்ந்தார். அங்கு அவரை மற்றொரு நிலைமை எதிர் நோக்கியிருந்தது. தலைநகரே சுடுகாடு போலத் தோன்றியது; அங்கு தங்கி அன்புப் பணியாற்றினார். ஒருவர் தவறுக்காக மற்றவர் பழிவாங்கக் கூடாதென்றும் அதற்குப் பரிகாரம் தேடுவது சர்க்கார் கடமை என்றும் உபதேசித்தார்.

உண்மையிலேயே டில்லியில் சமாதானம் நிறுவப்படுமானால் மகாதமா புதிய பலத்துடன் பாக்கிஸ்தான் செல்வார்.

அகதிகள் துயரம்

லேடி மவுண்ட் பேட்டன் அறிக்கை

புதுடில்லி, அக். 12

இந்திய மந்திரிசபை அவசர கமிட்டியிடம் லேடி மவுண்ட் பேட்டன் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பல புதிய விஷயங்கள் அம்பலத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக விஷயமறிந்த வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது. மேற்கு பஞ்சாபிலிருந்து இந்தியாவுக்கு நடந்து வந்துகொண்டிருக்கும் அகதிகளின் பரிதாப நிலைமையை கமிட்டியினரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது.

லேடி மவுண்ட்பேட்டன் அறிக்கையின் ஆதாரத்தின்மீது பாக்கிஸ்தான் சர்க்காரிடம் இந்திய சர்க்கார் தமது கடுமையான ஆட்சேபத்தை சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய சர்க்காருடன் நிஜாம் சமஸ்தானம் பலப் பரீட்சையா?

லண்டன் நிஜாம் ஏஜண்டு வீராப்புக்கு சர்தார் பட்டேல் சாட்டை

நிஜாம் பிரதமர்-சர்தார் பட்டேல் சந்திப்பு

புதுடில்லி, அக். 11.

இந்திய உதவி பிரதமர் சர்தார் பட்டேல் கீழ்க் கண்ட அறிக்கை வெளியிடடுள்ளார்:-

இந்திய சர்க்கார் "அதிரடி தந்தரங்களை" கையாளலாமென்று எதிர் பார்ப்பதாயும் ராணுவநிர்ப்பந்தங்கள் கொண்டு வந்தால் நிஜாமின் பலம் பொருந்திய சிறந்த ராணுவம் எதிர்க்கத் தயாரென்றும சொலலி லண்டனிலுள்ள நிஜாமின் ஏஜண்ட் ஜெனரல் வெளியிட்டுளள அறிக்கையைப் பார்த்தேன்.

நிஜாம் சர்க்காரின் கருத்துக்களையோ அலலது பயங்களையோ இந்த அறிக்கை பிரதிபலிக்கவிலலை என்பதுநிச்சயம். நிஜாம் சர்க்காரின் தேர்ந்த புத்திசாலிகளான ஆலோசகர்கள் இப்பொழுது நாஸூக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மிகுந்த நேசபாவத்துடனும் அமைதியான சூழ்நிலையிலும் சம்பாஷணைகள் நடந்து வருகையில் இத்தகைய பொய்யான அர்த்தமற்ற பிரசாரத்தின் முறைப் பிசகை அவர்களே முதலில் உணருவர்.

இந்திய டொமினியன் அதில் சேர்ந்த சமஸ்தானங்களின் படைகளுக்கும் எமது படைகளுக்குமிடையே நிஜாம் சர்க்கார் பலப் பரீட்சை செய்ய முற்படுவார்கள்என்பது நினைக்கவும் முடியாததாகும்.

இத்தகைய ஆதாரமற்ற அவலட்சணமான சண்டை பயங்களை அவசரப்பட்டு பத்திரிகைகளுக்குக் கொடுப்பதை ஹைதராபாத் சர்க்காரும் விரும்பமாட்டார்கள்.

பட்டேலுடன் நிஜாம் பிரதமர் பேட்டி

புதுடில்லி, அக். 11.

நிஜாம் பிரதமர் சதஹாரி நவாப் இன்றுசர்தார்பட்டேலை பேட்டி கண்டார்.

ஏஜண்ட் ஜெனரலின் அறிக்கை

லண்டன், அக். 9

ஜுனாகத்தில் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகள் பற்றி தமது சர்க்கார் கூர்ந்து கவனித்து வருவதாக லண்டனிலுள்ள ஹைதராபாத் ஏஜண்ட் ஜெனரல் நவாப் ஸர் நவாப் ஜங் யு. பி. யிடம் கூறினார்.

நிஜாம் சுதந்திரமாயிருப்பது என்ற தனது முடிவில் உறுதியாயிருக்கும் பட்சத்தில் ஹைதராபாதுக்கு விரோதமாகவும் இவ்விதமான "திடுக்கிடவைக்கும் தந்திரங்கள்" கையாளப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் கூறினார்.

நிஜாம் 'பலவந்த' முயற்சிகள் அனைத்தையும் "எதிர்க்கும்" என்பது உறுதியென்றும், "ஹைதராபாத்தின் பலம் பொருந்திய சிறந்த ராணுவததின் மூலம்" எதிர்ப்பதற்குக் கூட அது தயார் என்றும் நவாப் ஜங் கூறினார்.

14-ம் தேதி

தனது தனிக்காட்டு ஆட்சியைத் தொடர்ந்து நடத்துவதா அல்லது 2 கோடி ஜனங்களைக் கொண்ட தனது 18,000 சதுர மைல் பரப்பு கொண்ட பிரதேசம் இந்திய யூனியனின் ஒரு அங்கமாக ஆகிவிட வேண்டுமா என்பதுபற்றி முடிவு செய்ய ஹைதராபாத் நிஜாமுக்கு இன்னும் 5 நாள் தவணையே உள்ளது.

இந்த வருஷம் ஆக. 8, 14-ம் தேதிகளுக்கிடையே இந்திய கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனுக்கும் நிஜாமுக்குமிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்துகளின்படி ஹைதராபாத இந்திய யூனியனில் சேருவதா அல்லது பிரிட்டிஷ் காமன் வெல்த் சர்க்கார் ஒப்புக்கொள்ளாத ஒரு தனிக்காட்டு ராஜாவாகஇருக்க விரும்புகிறாரா என்பது பற்றி முடிவு செய்ய நிஜாமுக்கு அக். 14-ம் தேதிவரை தவணை கொடுக்கப்பட்டது. இககடிதப் போக்கு வரத்துகள் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

தென்னாப்பிரிக்க இந்தியர் சத்தியாக்கிரகம்

டர்பன், அக். 12

தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்கார் ஆசியத் துவேஷ நடவடிக்கைகளை எதிர்த்து ஆரம்பிக்கப்படும் சத்தியாக்கிரகப் போருக்கு ஆதரவளிப்பதாகவும், ஐக்கிய தேச ஸ்தாபனம் தனது தீர்மானங்களை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்கார் மீது போதிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமென்று நம்புவதாகவும் இன்று இங்கு நடைபெற்ற பிரமாண்டமான தோர் இந்தியர்களின் பொதுக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

(ராய்ட்டர்)

பர்மா பிரதமர் லண்டனுக்குப் புறப்பட்டார்

ரங்கூன், அக். 12

பர்மா பிரதம மந்திரி தக்கின் நு வும் உதவிப்பிரதமரும் பாதுகாப்பு மந்திரியுமான கர்னல் போலெட் யாவும் இன்று காலை விமான மார்க்கமாக லண்டனுக்குப் பயணமானார்கள். பிரதம மந்திரி அந்தரங்கக் காரியதரிசி போ டுன் லின்னும் செல்கிறார். அதே விமானத்தில் இங்கு தங்கியிருந்த பிரிட்டிஷ் யுத்தக் காரியாலய தூதுக் கோஷடித் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி. கே. போர்னும் செல்கிறார். (ராய்ட்டர்)

சூறாவளி மீது அமெரிக்கா படையெடுப்பு

விரட்டியடிக்க விமான நடவடிக்கை

நியூயார்க், அக் 13

தெற்கு பிளாரிடாவில் அடித்த சூறாவளிக் காற்றும் பெரும் மழை பெய்து வெள்ளம் ஏற்பட்டது. அமெரிக்க கடற்படை விமானங்களும் ராணுவ விமானங்களும் சூறாவளியுடன் போராடி அதை அட்லாண்டிக் சமுத்திர மத்திய பாகத்திற்கு விரட்டினர் சர்ப்பங்கொண்ட மேகங்கள் மீது விமானங்கள் உலர்ந்த பனிக்கட்டி பொடிகளைத் தூவி சீக்கிரம் மழைபொழியும்படி செய்யவே சூறாவளி ஒட்டம் பிடித்தது. இதனால் வெள்ளக்கால் நாற்றுக்கணக்கான வீடுகள் மூழ்கியபோதிலும் சூறாவளியால் அதிகச் சேதமில்லாது போயிற்று. (ராய்ட்டர்)

மேற்கு சமோவாவுக்கு புதிய அரசியல்

லண்டன், அக். 12

மேற்கு சமோவாவுக்கு நியூஸிலந்து நிர்வாகத்தின் கீழ் புதிய அரசியல் திட்டம் வழங்கும்படி ஐக்கியதேச ஸ்தாபன தூதுக் கோஷ்டி அறிக்கை தயாரித்து தர்மகர்த்தா கமிட்டிக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். மேற்கு சமோவாவில் சமோவா வாசிகள் பெரும்பான்மையாகவுள்ள சட்ட சபையும் அவர்களது பிரதிநிதிகளடங்கிய நிர்வாக சபையும் அமைக்கும்படியும் அந்நிர்வாக சபைக்கு நியூஸிலந்து ஹை கமிஷனர் தலைவராக இருக்க வேண்டுமென்றும் தர்மகர்த்தா முறையில் நியூஸிலந்து சர்க்காருக்கு நிர்வாக அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கின்றன. (ராய்ட்டர்)

காஷ்மீர் சமஸ்தானம் எதில் சேரும்?

ஷேக் அப்துல்லா கருத்து

இந்த முக்கிய பிரச்னையில் மதத்திற்கு இடம் கிடையாது

ஸ்ரீநகர், அக். 9

"நமது தேசத்தின் க்ஷேமம் சுபீட்சம் இவற்றை மட்டிலுமே நோக்கமாகக் கொண்டு பரிசீலனை செய்த பின்னர்தான் காஷ்மீர் இந்திய யூனியனில் சேரவேண்டுமா அல்லது பாக்கிஸ்தானில் சேரவேண்டுமா என்னும் பிரச்னைபற்றி தேசிய மகாநாடு தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும். இந்த முக்கியமான பிரச்னைக்கு சரியான தீர்ப்பு கண்டுபிடிப்பதில் மதம் போன்ற விஷயங்கள் குறுக்கே நிற்கமாட்டா", என்று அகில இந்திய சமஸ்தான பிரஜைகள் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ ஷேக் முகம்மது அப்துல்லா நேற்று முஜஹித் மன்ஸில்பாரா என்ற இடத்தில் நடைபெற்றதேசிய மகாநாட்டு ஊழியர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:-

எந்த டொமினியனில் நாம் சேரவேண்டும் என்பதுபற்றி நாம் நமது லட்சியத்தை அடைந்தபின்னரே யோசிக்க முடியும். நாம் அடிமைகளாயிருக்கும்வரை அதுபற்றி முடிவு செய்ய முடியாது. சுதந்திரத்துக்கான நமது கோரிக்கையை எந்த டொமினியன் ஒப்புக் கொண்டு ஆதரிக்கிறதோ அந்த டொமினியனில் சேருவதையே நாம் ஆதரிப்போம் என்பது உண்மையே.

தாம் ஆரம்பித்த "காஷ்மீரை விட்டு வெளியேறு" என்ற சுலோகம் பற்றி ஸ்ரீ அப்துல்லா கூறியதாவது:—

ராஜ்யாதிகாரம் மக்களுக்குத்தான் சொந்தம்; மகாராஜா சட்டவரம்பிற்குட்பட்டே ஆளவேண்டும்; நமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ள மக்களுக்கு உரிமை இருக்கவேண்டும என்பதே அந்த சுலோகத்தின் தாத்பரியம். பூரண நியாயமான இந்தக் கோரிக்கை வெளி உலகில் தப்பர்த்தம் செய்து கொள்ளப்பட்டு நான் மகாராஜாவை ஒழிக்க விரும்புவதாகச் சொலலப்பட்டது. அதிகாரம் மக்கள் கைக்கே வரவேண்டும்.

இந்திய சர்க்கார் நிலை

புதுடில்லி, அக். 11

இந்திய யூனியனில் சேருவதா, பாக்கிஸ்தானில் சேருவதா என்ற விஷயத்தை முடிவு செய்யும்படி காஷ்மீர் சமஸ்தானத்தை இந்திய சர்க்கார் இன்னும் கேட்கவில்லையென்று கம்பகமாக அறியப்படுகிறது. பூகோள ரீதியில் காஷ்மீர் இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் சம்பந்தப்பட்டிருப்பதால் காஷ்மீர் சமஸ்தானாதிபதியும் பிரஜைகளும் சர்வ சுதந்திரத்துடன் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பது இந்திய சர்க்காரின் விருப்பமாகும்.

புதிய அரசாங்கம் நிறுவுவதே உடனடி வேலை

கமியூனிஸ்டுகள் கொள்கைப்பற்றி திரு. கெனமன்

கொழும்பு, அக். 13

"யூ பின் பி. பிரசாரகர்கள் தாம் புனருத்தாரண சேவைகளில் நம்பிக்கை கொண்டவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அப்புனருத்தாரணம் புரட்சிகரமாய் இருக்கக் கூடாது. மெள்ள மெள்ள வளரவேண்டும் என்றும் சொல்கிறார்கள் நாம் உலக சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கான ஒவ்வோர் சீர்திருத்தமும் புரட்சிப் பாதையாலேயே பெறப்பட்டிருக்கிறது என்பதும், சபா மண்டபங்கள் எதிரொலிக்கச் செய்யப்படும் பேச்சாலும் வாய் வீச்சாலும் பெறப்பட வில்லை என்பதும் தெரியவரும்."

மேற் கண்டவாறு கும்பனித் தெருவில் இலங்கை பார்லிமெண்டில் அங்கம் வகிக்கும் இலங்கைக் கமியூனிஸ்ட் கட்சியின் 5 அங்கத்தினருக்கும் அளிக்கப்பட்ட பொதுஜன வரவேற்பின் போது தலைமை வகித்து கும்பனித் தெரு வட்டார நகரசபை அங்கத்தினர் டாக்டர் குமாரன் ரத்னம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் வீட்டு வாடகை அதிகரிக்கப் பட்டிருப்பதைக் கண்டித்தார். 1941-ம்வருட நிலைக்கு இது குறைக்கப் படவேண்டும். அல்லாத பட்சத்தில் வாடகை கொடா இயக்கம் ஆரம்பிக்கவேண்டும் என்றும், போலிஸ் அவசரச் சட்டத்தை ரத்தாக்க வேண்டும் என்றும் கூறினார். கொழும்பு மத்தியப் பகுதி பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. பீட்டர் கெனமன் தமது பேச்சின்போது கூறியதாவது:-

இன்று புதிய அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறதே, அதனால் நமக்கேதாவது நன்மைஉண்டா என்று பொது மக்கள் கேட்கிறார்கள். ஆனால் இன்று ஒரு சிறுபான்மைக் கட்சி, நியமன அங்கத்தினரையும், மிரண்டு போன சில சுயேச்சை வாதிகளையும் துணை கொண்டு அமைத்திருக்கும் இவ்வரசாங்கமோ பிற்போக்கானதும், ஜன விரோதமானதும் ஆகும். முன்னேற்ற வாதிகள், இடது சாரிகள் இடையே இருக்கும் வேற்றுமைகளை அது உபயோகிக்கச் சதி செய்து வருகிறது. இதனைத் தவிர்க்க இடது சாரிகளும் எல்லாத் தீவிரவாதிகளும் ஒன்று சேர்ந்து ஒரு புது அரசாங்கம் நிறுவி, அதனை ஏகாதிபத்திய எதிர்ப்புகளில இருந்து பாதுகாக்க வேண்டும். சிலர் அப்படி நிறுவப்படும் அரசாங்கத்தில் இடது சாரிகள் அங்கம் வகிக்கக்கூடாது என சில இடது சாரிக் கோஷ்டிகள் கருதுகின்றன. அப்படி நிறுவப்படும் அரசாங்கத்தையும் எதிர்க்க வேண்டும் என்பது அவர்கள் கொள்கை. இன்று பதவிக்கேற்றவோம், பின்னர் காலை வாரிவிடுவோம் என்ற இக் கொள்கை தப்பானது. இடது சாரிகள் அப்படி நிறுவப்படும் அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பதே பொது மக்கள் ஆசை. அந்த மஹத்தான பொறுப்பைத் தட்டிக் கழிக்கக்கூடாது.

எதிர்க் கட்சித் தலைவர் ஒருவர் வேண்டும் என்ற இப் பிரச்னை இப்போ இல்லை. பிரிட்டிஷ் மாமூலான இதை இங்கு நுழைக்க என். எம். பெரேராவைத் தவிர வேறு எவரும் ஆசைப்படவில்லை. எதிர்க் கட்சிகள் இத்தகைய எதிர்க் கட்சிப் பதவிபற்றி சிந்திப்பதைவிட புதிய அரசாங்கத்தை நிறுவும் மார்க்கத்தைப்பற்றிச் சிந்திப்பதே மேலாகும்."

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, டபிள்யூ. பி. ஏ. விக்கிரமசிங்க பிரேமலால் குமாரசிரி, கே. ராமநாதன் முதலிய பலர் அதன் பின் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களைப் பத்திரிகை எழுதுவது:

யாழ்ப்பாணத் தமிழருக்கு புகலிடமுண்டு

தென்னிந்தியாவிலும் மலேயாவிலும் போய்க் குடியேறலாம்

சிங்களவருக்கு இலங்கையே சொந்த நாடு

திரு. ஜீ.ஜீ.க்கு "சியறட்ட" பத்திரிகை எச்சரிக்கை விடுக்கிறது

"போக்குவரத்து மந்திரி திரு. கொத்தலாவலையை ஆசிரியராகக்கொண்ட "சியறட்ட" என்னும் சிங்களப் பத்திரிகை 10-10-47ல் எழுதிய ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:-

திரு. பொன்னம்பலம் சிறந்த அரசியல்வாதியேயன்றி, அவர் ஒரு 'கபடக்காரரென்று நாம் எண்ணவில்லை. நாசகரமான வகுப்பு வாதப் பிரசாரத்தினால் யாழ்ப்பாணக் குடா நாட்டில உள்ள எல்லாத் தொகுதிகளையும் தமிழ்க் காங்கிரஸ வெற்றி பெறச் செய்ததிலிருந்து, அவருக்கு யாழ்ப்பாண மக்களிடையே எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்று ஒருவாறு அறிந்து கொள்ளலாம் திரு. பொன்னம்பலம், முதலாவதாக தான் தமிழனென்றும், இரண்டாவதாக தான் இலங்கையனென்றும் எண்ணுவதாகக் கூறப்படுகிறது. அப்படியானால்த வியாக்கியானம் புரிந்துகொள்ள முடியாததாய் இருக்கிறது. ஆனபடியால், அது சம்பந்தமாக மற்றவர்களை மூடர்களாக ஆவதற்கு அவர் இடம் வைக்க வில்லை தப் மனச்சாட்சியின்படி திரு. பொன்னம்பலம் எண்ணுவதையும் பேசுவதையும்பற்றி அவருக்கு மற்றையோர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. நாம் இப்படிச் சொல்லுவதன் காரணம் நம் எல்லோருடைய நல்லெண்ணத்தையுண்டாக்கிக்கொள்ளுவதற்கும், ஒற்றுமையை மென்மேலும் வளர்த்துக்கொள்ளுவதற்கும், அவரவர்களுக் குள்ளே சூழ்நிலையை அறிந்துகொள்ளுவதற்கும் பிரயோசனமாய் இருக்குமென்றபடியால்தான்.

எங்கள் தமிழ்ச் சகோதரர்கள் தீர்க்கமாக ஆராய்ந்து, அறிந்து மனதிலிருத்திக்கொள்ளவேண்டிய விஷயமுண்டு. அதாவது, எங்களுடைய இந்த சிறிய தீவான இலங்கையானது சிங்களவர்களுக்குள்ள ஒரே அபயஸ்தானமென்றும், இத்தேசத்தை விட்டு ஒரு சிங்களவன் போகவேண்டி நேரிடின், அது சுரபுரமோ அல்லது யமபுரமாய்த்தான் இருக்குமென்றும், அன்றேல் ஆழம் பொருந்திய இந்து மகா சமுத்திரத்தில்தான் மூழ்க நேரிடுமென்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

எனினும் தமிழனின் நிலைமை என்ன? அவனுக்கு ரத்த உறவுடைய இனத்தவர்கள்-கைக்கெட்டிய தூரத்தில்-இந்தியாவில இருக்கிறார்கள்; வாய்க்காலுக்கே மச்சான்மார்கள் மலேயாவில் இருக்கிறார்கள். இவர்களின் பழக்க வழக்கங்களும், பேசும் பாஷையும் ஒரேமாதிரியாய் - ஒன்றாய் - இருப்பதினால் அதிக சிரமமின்றி அங்கே போய் வாழ முடியும். இந்தக் காரணத்தைப்பற்றி தமிழ்க் காங்கிரஸ்காரர்கள் உடனே ஆராய்ந்தறிவார்களானால், அதனாலுண்டாகும் பிரதிபலன் எங்கள் யாவருடைய நன்மைக்கும் பாத்திரமாய் இருக்கக்கூடுமென்று எண்ணுகிறோம். நாங்கள் அபிப்பிராயப்படுவதானது சிறுபான்மையினருள் சில வகுப்பு வாதிகள் மறந்துபோயிருக்கும், சில முக்கிய காரணங்களை அவர்களுக்கு நல்லெண்ணத்தோடு ஞாபகமூட்ட விரும்புகிறோம், அவ்வளவும் பிரயோசனமாய் இருக்கும்என்று எண்ணுகிறோம்.

தமக்கு எவ்வித உரிமையும் இல்லாதவை சம்பந்தமாக ருத்தல் இறைச்சி முழுவதையும், வேண்டிச் செய்கிற சிறுபான்மையினரின் தடபுடல்களை ஓரளவாவது நிறுத்திக்கொள்ளுவதற்கென்றால், நாம் அவர்களுக்கு காட்டிக்கொடுக்கும் காரணம்; இலங்கையானது, சிங்களவர்களின் ஒரே ஜென்ம உரிமையுள்ள தேசமாகும் என்பதே எமது அபிப்பிராயமாகும். எவ்வளவோ காலமாக சிங்களவர்களும் தமிழர்களும்-அவ்வளவு சச்சரவுகள இல்லாமல்-மட்டுக்கு மிஞ்சிய நேசத்தொடர்பு இல்லாமல் இருந்தபோதிலும் கூட ஒன்றாக வாழ்ந்திருக்கிறார்கள். இலங்கையின் எதிர்கால ஐக்கியம் எப்படியிருக்குமென்று, சென்ற காலங்களை அலசிப் பார்த்தால் எங்கள் மனதில் இருக்கும் எல்லா அபிலாஷைகளும் சூன்யமாய்ப் போய்விடக்கூடிய நடவடிக்கைகள் இப்போது நடந்துவருகிறதாகத் தெரிகிறது.

வகுப்புவாதக் கொடியை உயர்த்தியதனால், திரு பொன்னம்பலம் விருப்பமின்றியும் கூட, மறந்துபோய் இருந்த பழைய பூசல்களைக் கிளறிவிட்டு, சிங்களவர்களுக்கு புத்துணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார். "மத்தியதர சிங்களவர்களுடன் பரஸபர நல்லெண்ணத்தோடு ஒத்துழைப்பதற்கு தான் என்றும் தயார்" என்று கூறிவிட்டதால் ஏமாந்து போகக் கூடிய சிங்களவர்கள் சென்ற வெள்ளத்தோடு அடிபட்டுப் போய்விட்டார்களென்று, திரு. பொன்னம்பலமும் அவரின் கூட்டாளிகளும் அறியாதது துரதிர்ஷ்டமேயாகும். திரு. பொன்னம்பலத்தின் அந்தக் கபடக் கூற்றானது, சிங்களவர்களின் வாழ்வைக்கூட அவதான நிலைமைக்குக் கொண்டுபோய்விடுமென்று அறிவாரானால், உண்மையிலேயே அவர் அதற்காகத் துக்கப்பட்டிருப்பார் என்பது நிச்சயம். மற்றப்படி திரு பொன்னம்பலத்தின் கூற்றின்படி, தங்களுடைய நடைமுறைகளை பண்படுத்திக்கொள்ள சிங்கள தலைவர்கள் மனதில் எடுத்துக்கொண்டால், திரு. பொன்னம்பலத்தின் நிலைமை அவதானமாய் விடுமென்று சொல்லத் தேவையில்லை.

இவைகளை இங்கே குறிப்பிடுவதோடு, எங்களுடைய பார்வை ஒரேயடியாக, பொன்னம்பலத்திற்கு வெற்றியைப்பாராட்ட சமீபத்தில மலேயாவிலிருந்து இங்கு வந்த அவரின் மைத்துனரான ஸி. ஈ. துரைசிங்கம் அவர்கள பக்கம் செல்கிறது. திரு. பொன்னம்பலம் இங்கே முதலாவது தமிழனாகவும் இரண்டாவதாக இலங்கையனாகவும் நினைப்பது போன்று திரு. துரைசிங்கமும் மலேயாவில் அப்படித்தான் எண்ணுகிறாரா? உண்மையில் அப்படியல்ல. அவர் (திரு துரைசிங்கம்) மலேயாவில் முதலாவது இலங்கையனாகவும் இரண்டாவது தமிழனாகவுமே எண்ணுகிறார் எனினும் திரு பொன்னம்பலம் தன்னைப் போன்று தன் மைத்தனும் மடையல்லவென்று நினைத்து சிரியாமல் இருக்க முடியாது ஆனால் அப்படி சிரிக்குமுன்பு திரு பொன்னம்பலம் கவனிக்க வேண்டியதொன்றுண்டு. அதாவது இலங்கையிலல்ல மலேயாவில் தமிழர்கள் பெரும்பான்மையினரேயன்றி சிறுபான்மையினரல்லவென்பதை அறிய வேண்டும். இப்படியிருக்கும்போது திரு. துரைசிங்கம் தான் இலங்கையன் என்று நினைப்பது விஷயம் தெரியாமலல்ல; அவரின் தூரதிருஷ்டியான அறிவேயாகும்.

திரு. பொன்னம்பலத்தால் யாழ்ப்பாணத்தில் விதைக்கப்பட்ட வகுப்புவாத விஷக்கிருமிகள் சிங்களவர்கள் அதிகமாயுள்ள தொகுதிகளில் போட்டியிட்ட தமிழ் அபேட்சகர்களின் படுதோல்விகளுக்கு காரணமாய் இருந்தது என்று நாம நினைக்கிறோம் அப்படி ஏதாவதொரு தொகுதியில் ஏற்பட்டிருந்தால், அவை திரு பொன்னம்பலத்தின் இரு கண்களும் நன்றாக விழித்துக்கொள்ள உதவியாய் இருக்கும்.

தமிழர்களுக்கு இலங்கையிலே மற்ற சாகியத்தாரைப் போன்று, தம்முரிமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இதற்கு புதிய அரசியல் திட்டத்தில் எவ்வளவோ அநுகூலங்கள் உண்டென்பது தெளிவாய் இருக்கிறது. எனினும் நிர்வாக நடவடிக்கை சம்பந்தமாக, பெரும்பான்மையினருக்கு உத்தரவிடுவதற்கு தமக்கு உரிமையுண்டென்று, ஏதாவதொரு சிறுபான்மையினர் கடசி எண்ணினால் அது பெரியவோர் மூடத்தனமாகும். வேண்டுமானால், சிறுபான்மையினர் கூடியமட்டும் பெரும்பான்மையினருடன் பரஸ்பர நல்லெண்ணத்தோடு ஒத்துழைத்து எல்லோருக்கும் பொது நன்மையை உண்டாக்க முயற்சிக்கவேண்டும். அப்படியன்றி, சிறுபான்மையினர் தாம் விரும்பியபடி பெரும்பான்மையினர் நன்மைகளைச் செய்வார்களென்று எதிர்பார்த்து வாழா விருந்து தடபுடல் பண்ணுவதற்கு முயற்சி செய்தால், திரு பொன்னம்பலமோ அன்றி வேறு சிறுபான்மைக் கட்சியினரோ ஏமாற்றமடைவார்களேயன்றி வெற்றியடையமாட்டார்கள் இன்னும் தெளிவாகக் கூறினால், இது எங்கள் வாழ்விற்கும் மரணத்திற்குமிடையேயுள்ள போராட்டமென்றே நினைத்திருக்கிறோம்.

பொன்னம்பலம் (ஹுசியார்)
எச்சரிக்கை.

நகரில் உள்ள உணவுச் சாலைகள்

அசுத்தத்தை எதிர்த்துப் போராட்டம்

பொதுஜன சுகாதார இலாகாவின் தீர்மானம்

கொழும்பு, அக். 13

கொழும்பு நகரில் உள்ள உணவுச் சாலைகளில் உணவு வகைகள் ஒழுங்கான சுகாதார முறைப்படி வைத்துப் பரிமாறப்படவில்லை என்று அடிக்கடி புகார் செய்யப்பட்டு வந்திருக்கிறது. அத்துடன் சாக்கடை ஓரங்களில் கள்ளுக்கடைகளுக்குச் சமீபம் பெண்கள், சோறு முதலிய பொருட்களை மிக கேவலமான சூழ் நிலைகளில் வைத்து விற்பதும் பலத்த ஆட்சேபனைக்காளாகி உள்ளது இவற்றின் காரணமாக முனிசிப்பல் கவுன்ஸிலின் பொது ஜன சுகாதாரப்பகுதி தனது சுகாதார கண்காணிப்பைத் தீவிரப்படுத்த தீர்மானித்திருக்கிறதாக அறியப்படுகிறது. மேல்நாட்டுக்குப் போய் உணவுப் பரிசோதனையில் தேர்ச்சி பெற்ற ஒருவர் மேற்படி பொதுஜன சுகாதார இலாகாவில் சேவைக்கு நியமிக்கப்படுவார் என்றும் கூசென்ஸ் இல்லாமல் உணவு விற்பவர்கள் மீது தடை விதிக்கப்படுமென்று தெரிகிறது.

இனிமேல் புதிய உணவுச் சாலைகளை ஆரம்பிப்பதற்கு சுகாதாரரீதியில் உணவுப் பொருட்களை காப்பாற்றுவதற்கு வேண்டிய தட்டு முட்டுச் சாமான்கள் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே லைசென்ஸ வழங்கப்படுமென்று தெரிகிறது.

மைகேல் ஸ்காட்

ஐ. நா. வில் இந்திய ஆலோசகர்

நியூயார்க், அக். 12

தென்மேற்கு ஆப்பிரிக்கசுதேசிகளின் மனுக்களுடன் இங்கு வந்துள்ள மைகேல் ஸ்காட் இந்தியப் பிரதிநிதி மகாராஜா சிங்கின் ஆலோசகராக தென்மேற்கு ஆப்பிரிக்காபற்றிய விவாதத்தில் கலந்துகொள்வார் ஐ. நா. அசெம்பிளிக் கூட்டத்துக்குப் பிறகு அவர் இங்கே இருக்கக்கூடாதென்ற நிபந்தனையின் பேரில்தான் அவர் இங்கே வர அனுமதிக்கப்பட்டார்.

ஆசியாவின் ஒற்றுமைக்கு அறிகுறி

இந்தோனேஷியாவுக்கு இந்தியாவின் ரேடியோ செய்தி ஆரம்பம்

பண்டித நேருவுக்கு வியட்நாம் குடியரசு தலைவர் வேண்டுகோள்

புதுடில்லி, அக். 12

அகில இந்திய ரேடியோவின் வெளியுலகச் செய்திப் பகுதி இன்று இந்தோனேஷியாவுடன் செய்திப் போக்குவரத்து நடத்தும் திட்டத்தை ஆரம்பித்தது. இந்தியா இந்தோனேஷியாவுடன் பேசுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த ரேடியோ பகுதியை ஆரம்பித்து வைக்கும்போது இந்தியாவின் உதவி பிரதம மந்திரியும் தகவல், ரேடியோ மந்திரியுமான சர்தார் பட்டேல் இந்தோனேஷியாவுக்குக் கீழ்க்கண்ட செய்தியை அறிவித்து ரேடியோ மூலம் பேசினார்:-

சேவா உணர்ச்சியை முன்னிட்டே இந்தோனேஷியாவுடன் இந்த ரேடியோத் தொடர்பை ஏற்படுத்துகிறது. அகில இந்திய ரேடியோ உங்களுக்கு பொய்க் கலப்பில்லாததும் சுய நலநோக்கமில்லாததும் துவேஷ உணர்ச்சியில்லாததுமான நேர்மையான உண்மையான செய்திகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கும் ஆசியா மக்களின் எழுச்சிக்கும் சுயமரியாதை உணர்ச்சிக்கும் ஆசியாவின் ஒற்றுமைக்கும் அறிகுறியாக இந்த இணைப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. சரித்திர ஆராய்ச்சியாளர் கண்டுபிடிக்க முடியாத பண்டைக்காலந்தொட்டே இந்தியாவும் இந்தோனேஷியாவும் பல நூற்றாண்டுகளாக ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவையாக இருந்து வந்திருக்கின்றன. ஆனால் இடையே பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கம் ஊடே குறுக்கிட்டதன் பயனாக இரு நாடுகளின தொடர்பும் அறுபட்டிருந்தது இனி மீண்டும் இரு நாடுகளின் நாகரீகமும் கலாசாரமும் தொடர்புகளும் முன்போல ஒன்றுபடும் ஆசியாவின் எதிர்கால சுதந்திர, சுபீட்ச வாழ்வை சிருஷ்டிக்க இந்த ரேடியோ இணைப்பு உதவியாக இருக்கும்.

இந்திவிலுள்ள இந்தோனேஷிய குடியரசுப் பிரதிநிதி டாக்டர் சுதர்சனு பின் வருமாறு தெரிவித்தார்:-

இந்தோனேஷியாவுடன் இந்தியா புதிய ரேடியோ தொடர்பு ஏற்படுத்தியிருப்பது மிகவும் முக்கியமானது. இரு நாடுகளின் உறவை அது பலப்படுத்தும் இந்தசேவையை இந்தோனேஷிய மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

வியட்நாம் குடியரசுத் தலைவர்

சைகோன், அக். 12

வியட்நாம் (இந்தோசைனு) குடியரசுத் தலைவரான டாக்டர் ஹோசிமின் பிரான்ஸ வியட்நாம் குடியரசு மீது தொடுத்துள்ள யுத்தத்தை இந்தியா குறுக்கிட்டு உடனே தடுத்து சமரசத்தை உண்டுபண்ணும்படி இந்தியாவை வேண்டிக்கொண்டிருக்கிறார்.

டாக்டர் ஹோசிமின் இது சம்பந்தமாக பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு நேரடியாகச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

பாதுகாப்பு கவுன்ஸிலில் இப்பிரச்னையைக் கொண்டுவரும்படி இந்தியா பிரதிநிதி கோஷ்டித் தலைவரான ஸ்ரீமதி விஜயலக்ஷுமி பண்டிட்டுக்குக் கட்டளையிடும்படி டாக்டர் ஹோசிமின் பண்டித நேருவைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தோசைனுவுக்கு நேரில் வந்து நிலைமைகளை அறிய இந்தியத் தலைவர்களடங்கிய ஒரு கமிஷனை அனுப்பிவைக்கும்படியும அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஆஸ்திரேலிய பிரதம மந்திரி சீட்னிக்கும் இவ்விதம் வேண்டுகோள் ஒன்று அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

பிரான்ஸின் கைப்பொம்மையான 'வியட்நாம் நிர்வாகக் கமிட்டி' தலைவர் திரியின் பிரேத அடக்கம் ஹானோயில் நேற்று நடைபெற்றது. அவரைக் கொலை செய்தவரைக் கண்டு பிடிப்பவருக்கு 30'000 பியாஸ்டிரிஸ் (வியட்நாம் நாணயம்) பரிசளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

டொங்கிங் மாகாணத்தில் பிரஞ்சுத துருப்புகள் 6 தினங்களாக நடவடிக்கை எடுத்து வெற்றி பெற்று வருவதாக பிரஞ்சு செய்தி அறிவிக்கிறது.

பிரஞ்சுக் காரரும் வியட்நாமியருமடங்கிய சோஷியலிஸ்ட் கடசி, கொச்சின் சைனாவில ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது யுத்தத்தை நிறுத்தி பிரான்ஸ் வியட்நாமுடன் சமரசப் பேச்சு நடத்தும்படி அக்கடசி பிரசாரம் ஆரம்பித்திருக்கிறது. அக்கடசி வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிப்பதாவது:- யுத்தத்தை நிறுத்தி, பிரஞ்சு யூனியனுக்குட்பட்ட சுதந்திரமும் ஐக்கியமும் ஜனநாயக முறையுமுள்ள ஆட்சியை இந்தோசைனுவில் நிறுவுவதற்கு பிரஞ்சு சர்க்கார் உடனே வியட்நாம் குடியரசு தலைவருடனும் மற்றுமுள்ள வியட்நாம் பிரதிநிதிகளுடனும் சமரசபேச்சு ஆரம்பிக்க வேண்டும். வியட்நாம் யுத்தத்தால் பிரஞ்சு சர்க்காருக்கு தினந்தோறும் 10 லட்சம் பிராஸ்டுகள் செலவாகின்றன. இந்தப் பணத்திற்குப் பதில் தினம் 100 குடும்பங்கள் வசிக்க வீடுகளும் 2000 நோயாளிகள் ஒவ்வொன்றிலும் சிகிச்சை பெறக்கூடிய 10 ஆஸ்பத்திரிகளும் கட்டலாம்.

ஜெய்ப்பூர் மகாராஜா வெள்ளி துலாபரம்

25 வருட ஆட்சிக் கொண்டாட்டம்

ஜெய்ப்பூர், அக். 12

ஜெய்ப்பூர் மகாராஜா பட்டம்பெற்று 25 வருடமாகிறபடியால் நேற்று வெள்ளி விழாக் கொண்டாட்டம் அதி விமரிசையாக நடைபெற்றது. மகாராஜாவும் மகாராணியும் தராசின் ஒரு பக்கத்தில் வீற்றிருக்க மற்றொரு பக்கத்தில் அவர்களது எடைக்குச் சரியாக வெள்ளி வைத்து நிறுக்கப்பட்டது. அந்த வெள்ளி பொதுஜனங்களுக்கு தர்மமாக வழங்கப்பட்டது. ஜெய்ப்பூர் சமஸ்தானம் 15,610 சதுரமைல் விஸ்தீரணமும் 30,40,876 ஜனத்தொகையுமுடையது. மூன்று தினங்கள் விடுமுறை யிடப்பட்டிருக்கிறது. மாலையில் அரண்மனையும் கோட்டையும் நகரின் மற்ற கட்டிடங்களும் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. சமஸ்தானத்திலுள்ள 7 அரண்மனைகளிலும் இன்று காலை ஒவ்வொன்றிலும் 101 பீரங்க வேட்டுகள் போடப்பட்டன.

(அ-பிரஸ்)

மஞ்சூரியா யுத்தம்

பெய்யும் பனியில் கோரச் சமர்

ஷாங்கை, அக் 12

ஜெஹோல் எல்லைக்கருகே மஞ்சூரியா யுத்தம் நடைபெறுகிறது. பெய்யும் பனியிலே 20,000 கமியூனிஸ்ட் துருப்புகள கோர யுத்தம் புரிகின்றனர். பீப்பிங்-முகடான் ரயில பாதையிலுள்ள சின்லிட்டம் என்ற முக்கிய இடத்தைக் கைப்பற்றப் போராடுகின்றனர். மற்றும் மூன்று முனைகளிலும் சீன சர்க்கார் துருப்புகளுக்கும் சீன கமியூனிஸ்ட் துருப்புகளுக்கும் போர் நிகழ்கின்றது மஞ்சூரியா யுத்தத்தில இரு தரப்பாருக்கும் வெற்றி தோல்வி ஏற்படாதென்று கருதப்படுகிறது. [ராய்ட்டர்]

சாம்ராஜ்யப் பாதுகாப்பு ராணுவ ஆராய்ச்சி

லண்டன், அக். 12

பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பாதுகாப்பு ராணுவ அமைப்பின் அபிவிருத்திக்கு வேண்டிய விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரச்னைகளைப் பற்றி விவாதிக்க சர் ஹென்றி டிஸார்ட் தலைமையில் பிரிட்டிஷ் பாதுகாப்பு ஆராய்ச்சி கொள்கைக் கமிட்டியின் கூட்டம் அடுத்த மாதம் இங்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு பிரபல விஞ்ஞானிகளும் ராணுவப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதிநிதிகளும் விஜயம் செய்வார்கள். (ராய்ட்டர்)

மீண்டும் மார்ஷல் திட்ட மகாநாடா?

லண்டன், அக். 13

16 மேற்கு ஐரோப்பிய மார்ஷல் திட்ட மகாநாட்டை மீண்டும் கூட்டுவதற்கு அமெரிக்கா விரும்புவதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக பாரிஸில் அமெரிக்க சர்க்கார் பிரதிநிதிகள் அம்மகாநாட்டின் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களுடன் பேசுவார்கள்

(ராய்ட்டர்)

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ராணி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு, கொழும்பு

எஸ். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி

கல்வியே கருந்தனம்

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.

புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸதிரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரோச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கட்டிட வேலைக்கு வேண்டிய எல்லா விதமான சாமான்களும் குறைந்த விலையில் கிடைக்கும் இடம்

செட்டிநாட் கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிரான்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனநாயக்கா டிசம்பரில் புதுடில்லி செல்வார்?

யாழ்ப்பாணக் கூட்டத்தில் கிரியின் குறிப்பு

யாழ்ப்பாணம், அக். 12

யாழ்ப்பாணம் 'இந்துக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவுக்குச் சமுகமளிததிருந்த இந்திய அரசாங்கத்தின் இலங்கைப் பிரதிநிதி திரு வி. வி. கிரி அடுத்த டிசம்பரில் இலங்கைப் பிரதமர் திரு. சேனநாயக்காவுடன் தாமும் புதுடில்லிக்கு இந்தியப் பிரச்னையைத் தீர்க்கும் நோக்கமாக செல்லக்கூடும் என நம்புவதாகக் குறிப்பிட்டார்.

ஸ்ரீமதி கிரி சமுகமளிக்காததால் இந்திய வர்த்தக கமிஷனர் திரு. ஆர். கே. தாண்டன் பரிசுகளை வழங்குனர்.

தலைமை ஆசிரியர் திரு. ஏ. குமாரசாமி தமது வருடாந்த அறிக்கையிலேடொமினியன் அந்தஸ்தின் வரவோடு கல்வியைப் பொதுமக்களிடையே பரப்புதல் அவசியம் என்றும் எனவே இலவசக் கல்வி அத்தியாவசியம் எனவும் குறிப்பிட்டார். ஆனுல் தனசரி கல்வி சம்பந்தமான கொள்கையில் ஒட்டுப் போடுவதை நிறுத்திவிட்டு, ஒரு லட்சியத்தை நோக்கிச் செல்லும் திட்டம் அவசியமென்றும் அவரால் கூறப்பட்டது. தமது கல்லூரி மாணவர் விடுதியில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஒன்றுபட்டு வசிக்கும் விஷயத்தைச் சுட்டிக் காட்டி, வித்தியாசங்களை அரசியல் வாதிகள் பெரிதுபடுத்துவதாக அவர் குறிப்பிட்டார்.

திரு. கிரி தமது பேச்சின் போது, இலங்கை, இந்தியா, பர்மா முதலிய ஆசிய நாடுகளுடன் சுதந்திரநாடாக விளங்கும் காலம் நண்ணுகிறது என்றும், இலங்கை-இந்தியப் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்றும் இலங்கை பிரதமருக்கும் தமக்கும் நடந்த கடிதப்போக்கு வரத்து பற்றியும் குறிப்பிட்டார்.

திருச்சிக்கும் மதுரைக்கும் விமானப் பயணம்

இலங்கை - தென்னிந்திய விமானப் போக்குவரத்து

கொழும்பு, அக். 14

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை, திருச்சி, மதுரை வரை விமானப்போக்குவரத்து நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. இலங்கை சிவில் விமான இலாகாவைச் சேர்ந்த விமானம் 16-ம் தேதி இடபாதையில் பயணத்தை ஆரம்பிக்கும். ரத்மலானை விமான நிலையத்திலிருந்து 16-ம் தேதி காலை 7-30 மணிக்கு இவ்விமானம் புறப்பட்டுச் செல்லும். கொழும்பிலிருந்து திருச்சிக்கும் மதுரைக்கும் செல்ல கட்டணம் ரூ. 65-00

நடுத் தெருவில் பெண்ணிடம் சேஷ்டை

எதிரிக்கு ரூ 25 அபராதம்

பாணந்துறை, அக் 12

அலுத்கமையைச் சேர்ந்த ஹெண்ட்றிக் சில்வாவின் மீது கார்லினுஹாமி என்ற பெண்ணைப் பலவந்தம் செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 6 மாதக் கடுழியச் சிறைத் தண்டனையும், அத்துடன் ரூ 50 அபராதமும் விதிக்கப்பட்டது

மேற்படி அபராதப் பணத்தில் ரூ 25 கார்லினுஹாமிக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

பிரஸ்தாப பெண் ஒரு வீதியைக் கடந்து செல்கையில் ஹெண்ட்றிக் சில்வா வழி மறித்து அவளது உடைகளை இழுத்துக் கிழித்து விட்டதாகச் சொல்லப்பட்டது.

திரு. பிலிப்குணவர்த்தனவின் அப்பீல் வழக்கு

கொழும்பு, அக். 13

பாராளுமன்ற அங்கத்தினராகியிருக்கும் திரு. பிலிப்குணவர்த்தனவுக்கு சிறைத் தண்டனை விதித்து அளிக்கப்பட்ட தீர்ப்பின்மீது அவர் செய்த அப்பீல் வழக்கு அப்பீல்தார் தரப்பில் எவரும் ஆஜராகாததை முன்னிட்டு சென்ற வெள்ளிக்கிழமையன்று தள்ளுபடி செய்யப்பட்டது அதை மீண்டும் விசாரணைக்கு அப்பீல்வழக்கு ஜாபிதாவில் சேர்க்கும்படி இன்று அப்பீல்தார் தரபபில் திரு கிரேஷியன் கே. ஸி., இன்று நீதிஸ்தலத்தில் கோரினுர்.

ஐக்கிய தேச ஸ்தாபனம் அமெரிக்க ஏஜன்ஸி ஆகிறது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்று ரோம் நகரசபைத் தேர்தல் நடைபெற்று வருகிறது. பிரதமர் கட்சி பெற்றிபெறுமென சோஷியலிஸட் தலைவர் சீனுர் நெள்ளி தெரிவித்தார்.

பிரஞ்சு-இத்தாலி எல்லையிலுள்ள டென்டா பிரிகா என்னும் பிரதேசங்களை பிரான்சுடன் சேர்ப்பதா அல்லது இத்தாலியுடன் சேர்ப்பதா என்பதுபற்றி முடிவு செய்ய நேற்று தேர்தல் ஆரம்பமாயிற்று. 1922ல் இப்பிரதேசங்களை இத்தாலி கைப்பற்றியிருந்தது; மலைப் பள்ளத்தாக்கிலுள்ள 5 கிராமங்களடங்கிய இப பிரதேசங்கள்.

ரூர் ஜலவசதி

ரூர் பிரதேசத்தில் 1943-வது வருடம் வெடிகுண்டால் தகர்க்கப்பட்ட அணைக்கட்டு இன்னும் பழுதுபார்க்கப்படவில்லையாதலாலும் அங்கு நவம்பர் மாதம் கடைசியில் தண்ணீர் வற்றிப்போய்விடு மாதலாலும் கைதொழில் அபிவிருத்திக்கு ஜல வசதியில்லாது போகும் என்று பெர்லினிலுள்ள பிரிட்டிஷ் நிர்வாகக் கமிஷனர் தெரிவிக்கின்றனர்.

கிரேக்க கொரில்லாக்கள்

ஏதென்ஸ, அக். 12

கிரேக்க கொரில்லாக்களின் பலமிகுந்த படையொன்று மாஸ்டோனியாவிலுள்ள மெட்டாங்கிஷன் என்ற கிராமத்தைத்தாக்கி அங்கிருந்த ராணுவத் தளத்தைக் கைப்பற்றி 12 வீடுகளைக் கொளுத்தி 10 பேர்களைக் கொன்றது.

ரஷிய ஸ்தானிகம் சுடப்பட்டது

சான்டியாகோ, அக். 12

ரஷிய ஸ்தானிகத்தில் ஒரு மோட்டார் கார் செல்லும் போது யாரோ சிலர் அதை நோக்கி இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டனர்.

இது சம்பந்தமாக சில்லி சர்க்கார் (தென் அமெரிக்கா) ரஷிய சர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

மாஸகோவிலுள்ள சில்லி ஸதானிகரை ரஷிய அந்நிய நாட்டு மந்திரி அழைத்து சில்லியில் சோவியத் எதிர்ப்புப் பிரசாரம் நடைபெறுவதன் பயனுக இவ்வித சம்பவம் நிகழ்ந்தது என்று கண்டித்து எச்சரித்தார்.

சீனத்தில்

நாங்கிங, அக். 12

சீன சர்க்கார் கல்வி மந்திரி அறிவித்ததாவது:- சர்வ தேச அரசியல் குழப்படியான நிலையில் கமியூனிஸட் கொள்கையை புகுத்தவே பெல்கிரேடில் கமியூனிஸட் அகிலம் நிறுவப்பட்டிருக்கிறது. அது மார்ஷல் திட்டத்திற்கும் அமெரிக்க அந்நிய நாட்டுக் கொள்கைக்கும் எதிராக சவால் விடுப்பதுடன் கமியூனிஸட் அல்லாத உலகுக்கும் சவால் விடுக்கக் கூடியதாக இருக்கிறது.

சீன சர்க்கார் கூமின்டாங் கட்சியின் எதிர்க்கட்சியான டெமாக்ரட்டிக் லீக் பிரதிநிதி டாக்டர் லோலுங்கி பின் வருமாறு தெரிவித்தார்:-

டெமாக்ரட்டிக்லீக் கட்சியை ஒழித்து விடும்படி சீன சர்க்கார் அறிக்கை பிறப்பித்துள்ளது. மிகவும் கண்டிக்கத்தக்கது. கமியூனிஸ்டுகளுடன் அக் கட்சியைச்சேர்ந்த 20 பேர்கள் சதி செய்ததாக அக்டோபர் 10-ம் தேதி ஷென்ஸி மாகாணத்தில் தூக்கிலிடப்பட்டனர். நவம்பர் 21-ம் தேதி ஆரம்பமாகும் பொதுத் தேர்தலுக்குள் சீனக் குடியரசுத் தலைவர் டெமாக்ரட்டிக் கட்சியை ஒழித்துவிடப் பார்க்கிறுர்.

கொரியா

லண்டன், அக். 12

அமெரிக்காவின் போக்கைக் கவனிக்குமிடத்து கொரியா கூட்டு கமிஷனில் ஒத்துழைக்க விரும்புவதாகத் தெரியவில்லை என்று சோவியத் அந்நிய நாட்டு மந்திரி அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரிக்குகடிதம் எழுதியிருக்கிறுர்.

இந்தியா

மாஸகோ, அக். 12

அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ்தலைவரும் இந்திய கமியூனிஸ்ட் கட்சி நிர்வாகக் கமிட்டி அங்கத்தினருமான திரு எஸ். ஏ. டாங்கே 'நியூ டைம்ஸ்' என்ற சோவியத் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறுர்:-

இந்தியாவில் பிரிட்டிஷ் நிர்வாகம்எப்பொழுதும் தொழிலாளர் நலன்களுக்கு விரோதமாகவே இருந்து வந்திருக்கிறது. இப்பொழுது இருந்து வரும் பொதுஜன அரசாங்கமும் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு எதிர்ப்பாகவே இருக்கிறது யுத்தம் வந்து போயும் இந்திய ஜனங்களின் துயரம்ஒழியவில்லை. இந்திய தொழிலாளர்கள் அடிக்கடி வேலை நிறுத்தம் செய்து வருகின்றுர்கள். (ராய்ட்டர்)

கான்ஸடபிள் மீது தாக்குதல்

மூவருக்குச் சிறைத் தண்டனை

களுத்துறை, அக். 12

மக்கொணையைச் சேர்ந்த பெஞ்சமின், முன்ஹொனையைச் சேர்ந்த அலேஸ, குக்கர்கொடையைச் சேர்ந்த பீட்டர். ஆகிய மூவரும் பையகலைப் போலிசைச் சேர்ந்த மூன்று கான்ஸ்டபிள்களைக் கொலை செய்ய முயன்றதாகத் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது

முதலாம் எதிரி பெஞ்சமினுக்கு 10 வருட கடுழியச் சிறைத தண்டனையும், அலெஸிற்கு 4 வருடமும், பீட்டருக்கு 5 வருடமும் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஹரிஜன ஆலயப் பிரவேசம்

சம்மாங்கோடு ஸ்ரீ கதிர் வேலாயுதர் ஆலயத்தில் இன்று நடைபெறும்

கொழும்பு, அக் 14

இன்று மாலை 4-30 மணிக்கு ஜிந்துப்பிட்டித் தெருவிலிருக்கும் ராம்லால் மகாராஜா சத்திரத்திலிருந்து சம்மாங்கோடு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு ஹரிஜனங்கள் ஊர்வலமாகச் சென்று வழிபாடு நடத்துவார்கள் என்று காரியதரிசி அறிவிக்கின்றுர்.

கோணேசர் மலையில் "அரோகரா" வுடன் மாயமாய் மறைந்த பக்தர்

திரிகோணமலை, அக். 10

திரிகோணமலை கோட்டையில் கோணேசப் பெருமானைத் தரிசிப்பதற்காக அநேகர் அங்கு சென்று குழுமியிருந்தனர். பூசை ஆராதனை முடிந்ததும் யாரோ ஒருவர் "அரோகரா" என்னும் சத்தத்துடன் திடீரென்று மலையிலிருந்து பாய்ந்து விட்டார். அவர் அருகிலிருந்தவர்கள் ஓடிச்சென்று காவலாய் இருந்த இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரிடம் தெரிவித்ததும் போலிஸாருக்கு விஷயம் அறிவிக்கப்பட்டது. போலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்றனர். மாலை 6 மணிக்கு மேல் ஆளபடியால் ஆளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இவ்விதமான காடசி இவ்வளவு காலமாக இததலத்தில் நடக்கவில்லை யெனச சொலலப்படுகிறது. மறைந்தவர் இந்து மததவர் என்பது அவரது 'அரோகரா" தொனியிலிருந்து அறியப்படுகிறதாம். (ந-நி)

கரடியை சைக்கிளில் தொங்கவிட்ட கரோலிஸ

திரிகோணமலை, அக். 11

சென்ற 30-ம் தேதி 26 வயதுள்ள கே. கரோலிஸ என்பவர் திரிகோணமலை ரொட்டிப் போரணையில் உணவுச் சாமான்கள் வாங்கிக்கொண்டு சைக்கிளில் நிலாவெளிக்குச் செல்லுபோது அன்று இரவு 9 மணியளவில் ஆருங்கட்டையில் ஒரு கரடி அவர் முன் எதிர்ப்படு பாயந்து அவருடைய சைக்கிள் முன் பலன்ஸில் தொங்கிக் கொண்டது. கரோலிஸ மிகவும் தைரியமாய் சைக்கிளை அதிவேகமாய்ச் செலுத்தச் சென்றுர். ஒன்றரைக் கட்டை சென்றதும் கரடியுடன் கீழே விழுந்தார். கரடி, விழுந்ததும காட்டிற்குள் சென்றுவிட்டது.

கரோலிஸ் விழுந்த காயங்களுடன் ஆஸபததிரியில் சிகிச்சை பெற்று வீடு சேர்ந்துள்ளார். (ந-நி)

ஆசிரியருக்கு கடிதங்கள்

யூ என் பி அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும்

ஐயா,

மிஸ்டர் சேனநாயக்கா அவர்கள் தன்னுடைய மகன், மருமகன் மற்றும்இனஜன பந்து எல்லோருக்கும் மந்திரி பதவி கொடுத்தார். மற்றக் கட்சியினர் ஒருவருக்கும் ஒன்றும் கொடுக்கவில்லை. இதன் விந்தை என்ன? ஒருவேளை பிரதமப் பதவிக்கு ஆபத்து வரும் என்று தான் மறறவர்கட்கு மந்திரிப்பதவி கொடுக்கவில்லைபோல் இருக்கிறது. அப்படி பிரதமர் கொடுக்காவிட்டாலும்சரி, கொடுத்தாலும் சரி, சேனநாயக்காவுடன் ஒருவரும் ஒற்றுமையாக மாட்டார்கள். ஆனுல் இப்போது மிஸ்டர் சேனநாயக்கா தான் பிரதமரானுர். ஆனுல் இது அதிக காலம் நின்று பிடிக்காது! இன்னும் ஒரு வருஷமோ அலலது இரண்டு வருஷத்துள்ளோ சீர்குலைந்து மற்றக் கட்சியில் அதிகாரம வரும் என்பது திண்ணம். யூ. என். பி. அரசாங்கததை கூடிய சீக்கிரம் கீழே விழச் செய்யவேண்டும். இடதுசாரிக் கட்சி எல்லாம் ஒன்று சேர்ந்து யூ என். பி. யை மண் கவ்வச் செய்ய வேண்டும். இல்லையேல் நம் நாடு அடிமைததனத்தில் அமிழ்ந்தவேண்டி இருக்கும்; ஆகவே, ஆவன செயவார்கள் என்று நம்புகின்றேன்.

இப்படிக்கு,

வே. சதாசிவம்,

யாழ்ப்பாணம்

7--10--47.

மன்னுர் பிரதிநிதி

ஐயா,

சுயநலங்கருதியும், வாக்காளர்களுக்குக கொடுத்த வாக்குறுதியை மீறியும், மன்னுர் பிரதிநிதியாகிய திரு. சிற்றம்பலம் யூ. என். பி. சதிகார மந்திரி சபையில் அடைக்கலம புகுந்திருக்கிறுர். பாவம்! பட்டம் பதவிக்காகச் சேர்ந்து விட்டார். ஐக்கிய தேசியக கட்சியின் அரசியல் கொளகைகள் சரியல்ல என்று பறைதடடி, அககடசியின் அபேட்சகராகிய திரு. தியாகராஜாவோடு போடியிட்டார். இதோடு முடிந்ததா? இல்லை. யாழ்ப்பாண தொகுதிக்குஞ் சென்று திரு. ஜீ ஜீ பொன்னம்பலத்தின் வெறறிக்காகப் பரயாசைப்பட்டார். யூ. என. பி. ஒரு பணக்காரக் கடசியென்றும, அதைத தமிழர் ஆதரிக்கபபடாதென்றும கையொப்பமிட்டு நோட்டீஸுகள் ஆயிரக்கணக்காக வட்டார். இபபடி குமுறிக் கொட்டின சிற்றம்பலம் தற்பொழுது யூ. என். பி. மந்திரி சபையில் சேர்ந்த மாமம என்ன? இது சரியா, பிழையா என்று மன்னுர் வாக்காளாகள் மறு தேர்தலில் காட்டுவார்களென்று திரு. சிற்றம்பலததுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

த. கனகலிங்கம்

பம்பலப்பிட்டி, 8-10-47

கான்ஸ்டபிளுக்கு இடைஞ்சல் செய்தவருக்கு அபராதம்

நெடுந்தீவு, அக். 11

நெடுந்தீவு மேறகில சென்ற ஆகஸ்ட் மாதம் 28-ம் தேதி பாராளுமன்ற தேர்தல் நடைபெறறுக்கொண்டிருக்கையில் அவ்விடததில் கடமை செய்து கொண்டிருந்த யாழ்ப்பாணம் போலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் அம்பலவாணர் என்பவரை நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த பேரமபலம் என்பவர் கடமை செய்யாது தடுததது தேக தீங்கு செய்ய எத்தனிததாரென்று குற்றம் சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸடிரேட் முன்னிலையில ஓர் வழக்கை தாக்கல்செய்தனர். எதிரி தான் குற்றவாளியென ஒபபுக்கொண்டதன்பேரில் மாஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூபாய் 25 குற்றம் விதித்து எதிரியை பகிரங்ககோர்ட்டில் கான்ஸ்டபிளிடம் மன்னிப்புக் கேட்கும்படி தீர்ப்புக்கூறினுர். (ந-நி)

பாலஸ்தீன எல்லையில் கிரான்ட் முப்தி

2 லட்சம் யூத துருப்புகள் தயார் என்கிறுர் பிரிட்டிஷ் யூதர்

கமிட்டியில் ரஷியாவின் கருத்து எதிர்பார்க்கப் படுகிறது

நியூயார்க், அக். 13

ஐக்கிய தேச பாலஸதீனக் கமிட்டியில் ரஷியா உட்பட இன்னும் 22 நாடுகளின் பிரதிநிதிகள் பேச வேண்டியிருக்கிறது. இன்று விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

புரட்சிச் செயல்கள்

ஜெருசலேம், அக். 12

பயங்கரப் புரட்சிக்காரர்களான யூதர்களின சதிச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. டெல் அவிவில் ஒரு பிரிடடிஷ் ராணுவ மோடடார் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. போலந்து ஸதானிகர் காரியாலயததில் ஒரு வெடி குண்டு வெடிததது.

இரண்டு லட்சம் யூதர் துருப்புகள்

லண்டன், அக். 12

இங்குள்ள யூத மாஜி யுத்த வீரர்கள் சங்கததின் ஸதாபகரான மேஜர் சாமுவேல் வீசர் இன்று இங்கு பின்வருமாறு தெரிவித்தார்:- பாலஸதீனததிலிருந்து பிரிட்டன் வெளியேறி பிரிடடிஷ் துருப்புகள் காலி செய்யப்படுமாகில், அங்குள்ள யூதர்களைப் பாதுகாக்கவும் யூதர் குடியரசை ஏற்படுத்தவும் அராபியர்களை எதிர்த்துப போராடவும் ஒரு நிமிட அறிவிப்பில் உலகிலுளள 2 லட்சம் யூதர்கள் யுத்த சன்னத்தராக போருக்குப் புறப்படத தயாராக இருக்கிறுர்கள். இந்த சங்கத்தார் பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் துருப்புகளுக்குப் பதில் யூதர் தொண்டர் படையை நிறுவுமபடியும் பாலஸ்தீனததில் யூதர்களுககுக் குடியேற தனி நாடு சிருஷடிக்கும்படியும் பிரிட்டனையும், ஐகிய தேச ஸ்தாபனததையும அடிக்கடி வற்புறுததி வருகறுர்கள்.

யூதர்களை சிரியா துருப்புகள் தாக்கினவா?

லண்டன், அக் 13

பாலஸதீனததன் வட எல்லையில் வந்து தங்கியிருககும் சிரியா துருபபுகள் கலிலி பிரதேசத்திறகுள் பிரவேசிதது அங்கு யூதர் குடியேறறப் பகுதியிலுளள யூதர்களைத் தாகியதாக நிலவும வதநதி உணமையல்லவென்று ஜெருசலமிலுள்ள அதிகாரிகள மறுத்தனர்.

பாலஸதீனத்தின் வட கிழக்கு எல்லையில பனியால் எனனுமிடததல் கிரானட் முப்தி தங்கயிருக்கிறுர். அதற்கு 40 மைல தூரம தென்கழக்கில் குவினித்திரா என்னுமிடததல் சிரியா துருப்புகள தங்கயிருக்கின்றன (ராய்ட்டர்)

அரவிந்தரைப் பற்றி பேச்சு

விவேகானந்த சபையில் திலிப் குமார் ரேய்

கொழும்பு, அக் 13

சென்ற வாரம் இந்தியக் கவியும், சங்கீத நிபுணருமான ஸ்ரீ திலிப் குமார் ரேய் விவேகானந்த சபை மண்டபத்தில் ஸ்ரீ அரவிந்தரைப்பற்றி ஒரு அரிய சொற்பொழிவாற்றினுர்.

இக் கூட்டத்திற்கு திரு பரராஜ சிங்கம் தலைமைவகித்தார்.

கொலை வழக்கு

ஊர்காவற்றுறை, அக். 11

வேலணை கிழக்கைச் சேர்ந்த கார்ததிகேசு விசுவலிங்கம், கார்த்திகேசு நல்லதம்பி ஆகிய இருவரும் சென்ற ஆகஸ்ட் மாதம் அதே ஊரைச்சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னத்தம்பி என்பவரை வெட்டிக் கொலை செய்ததாக குற்றஞ சாட்டப்பட்டவழக்குஏற்கனவே வெளிவந்துள்ளது. ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட விசாரணை செய்த பின்னர் எதிரிகளை யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டில விசாரணை செய்ய அனுப்பி வைத்தார். (ந-நி)

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 4-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ருஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன். 2029 — டெலிகிராம். 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

வேலை இல்லாமல் திண்டாடுவோர் சங்கம்

உருவாக்கப்படும் எனப் பிரகடனம்

கொழும்பு, அக் 13

இலங்கை அரசாங்கத் தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் ஒன்று கொச்சிக்கடை முனிஸிப்பல் மைதானத்தில் நடைபெற்றது. அப்போது மேற்படி கூட்டத்திற்குத் தலைமை வகித்த சார்ல்ஸ டி. கந்தராகடந்த வேலை நிறுத்ததில் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்குத திரும்பவும் வேலை கொடுக்காததை முன்னிட்டு அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிததார்.

வேலையிலிருந்து நீக்கப்பட்ட சுமார் 500 சாககார் ஊழியர்களுக்கும் வேலை கொடுக்குமபடியும், அரசாங்க குமாஸதாக்கள் சங்கம், போலிஸ படையினர் சங்கம் ஆகியவறறின் மீதுள்ள தடையை நீக்கி முழு ஜனநாயக தொழிலசங்க உரிமைகள் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும்படியும தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையில் வேலையில்லாது திணடாடிவரும் எல்லாரையும் ஒன்று திரட்டி வேலை அலலது நிவாரணம் பெறுவதற்கு ஒரு பேரியக்கம் வளர்க்கத் தீர்மானித்திருப்பதாகவும் தலைவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

பெண் கடத்து வழக்கு

நெடுந்தீவு, அக். 11

நெடுந்தீவு கிழககைச்சேர்ந்த கதிரவேலு சின்னததம்பி என்பவர் அதே ஊரைச் சேர்ந்த சிவக்கொழுந்து என்னும் இளம் பெண்ணை கடததிச் சென்றுரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் ஊர்காவற்றுறை மாஜிஸடிரேட விசாரணை செய்த பின்னர் மேல் விசாரணைக்கு யாழ்ப்பாண டிஸடிரிக்ட் கோர்ட்டுக்கு அனுப்பி வைத்தார். (ந-நி)

திரிகோணமலையில் மோட்டார் விபத்து

ஒருவருக்குக் காயம்

திரிகோணமலை, அக். 11

இன்று காலையில் 14 வயதுள்ள முகமது சாலி என்பவர் தன்னுடைய வேலைத்தலத்துக்குப்போகும் வழியில் இன்னர்-ஹாபர் ரோட்டில ஓர் கடற்படை லொறியால் அடிபட்டு ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுர். (ந-நி)

கார் மோதி சிறுவன் மரணம்

அரசாங்க ஊழியர் ரூபாய் 750 பிணையில் விடுதலை

களுத்துறை, அக் 12

ஆயுர்வேத வைத்தியரான திரு டி. எல். இ. பெரேரா என்னும் வைத்தியரின் 6 வயது மகன் ஒரு காரினுல் மோதப்பட்டு இறந்துபோனுன்.

மேற்படி கார் அரசாங்க ஊழியரான ஸி. எச். பெரேராவினுல் ஓட்டப்பட்டது எனக் கூறப்படுகிறது. ஆனுல் அவர் அதனை மறுத்துவிட்டார்.

அவர் இப்போது ரூபாய் 750 பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறுர்.

கம்பஹா தேர்தல் ஆட்சேபனை மனு

நேற்று சுப்ரீம் கோர்ட்டில் பாராளுமன்ற கம்பஹா பிரதிநிதி திரு. டேவிட் கருணரத்ன தேர்தல் ஆட்சேபித்து திரு. ஜி. பி. பெர்னுண்டோ ஒரு மனு தாக்கல் செய்திருக்கிறுர். அச் சாபீஸ், வெளியிட்டோர் பெயர்களின்றி துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்ததாகவும் உம் சரிப்பு செய்ததாகவும், லஞ்சம் கொடுத்ததாகவும், மனுதார்ஒழுக்கத்தைப்பற்றிக் குறைவான விஷயங்கள் பிரசுரித்ததாகவும் காரணம் காட்டப்பட்டிருக்கிறது.

கைம்பெண் வீட்டில் களவு

ஊர்காவற்றுறை, அக். 11

ஊர்காவற்றுறையிலுள்ள குருசுமுத்து ரெசினுவென்னும கைம்பெண் வீட்டில் சென்ற இரவில் திருடர் புகுந்து ரூபாய் 750 பெறுமதியான நகைகள், சேலைகளைத் திருடி விட்டனர். விஷயம் விடிந்தபின்னர் கண்டு பிடிக்கப்பட்டு ஊர்காவற்றுறைப் போலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. போலிசார் துணிகரத் திருட்டையிட்டு புலன் விசாரணை செய்துவருகிறுர்கள். (ந-நி)

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 14உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org